718. பத்தியாம் வலையின் கண்ணே
பட்டிடும் பரமன் றானும்
நித்தலும் வாயால் வாழ்த்தி
நெஞ்சினால் நினைந்து போற்றி
கைத்தலஞ் சிரசிற் சேர்த்திக்
கடிமலர் சூட்டி வாழ்த்தின்
சித்திகள் அனைத்தும் நல்கிச்
சேர்ப்பனால் இன்பந் தானே 131

719. அந்தமில் ஈசன் றானும்
ஆய்ந்திடிற் பரமான் மாவாம்
முந்துமத் தன்மை தன்னால்
மூர்த்தியாம் அவனுக் கன்றி
வந்துயர் லிங்க மீங்கு
வகுத்திடில் யார்க்கும் இல்லை
இந்தநற் பரிசை ஏத்தி
இயம்பிடும் மறைகளெல்லாம் 132

720. சோதியாஞ் சிவலிங் கத்திற்
றுன்னுநற் பகுதி மூன்றால்
வேதனே மாயோன் ருத்ரன்
மேவியே ஆண்டு நிற்பர்
நீதியாம் ருத்ர பாகம்
நின்றவைஞ் சதாக்கி யத்துள்
ஓதிய கன்ம மென்னா
உரைப்பரால் உயர்ந்தோ ரம்மா 133

721. சேவிடைத் திரிவோன் மேலுஞ்
செப்புநல் இலிங்கந் தன்னில்
ஆவுடை யாளைப் பீடம்
ஆகவே கொண்ட செம்மை
ஓவிலா உயிர்களென்றும்
உளமிசைத் தூய்மை பேணிப்
பூவுடன் நீரு மேந்திப்
பூசனை புரிபெ ரு ருட்டாம் 134

722 உலகெலாம் ஒடுங்கித் தோன்றும்
உண்மையைச் சித்தி ரித்தே
அலகிலா ஆன்ம கோடிக்
கருடனைப் பொழிந்து காக்கும்
நலமலி ஞான சோதி
நற்சிவ லிங்கந் தானும்
இலகுசீர்ப் பரார்த்தம் மற்றும்
இட்டமாய் விரியுந் தானே 135

723. பேசிடு பரார்த்த லிங்கம்
பிஞ்ஞகன் றான மர்ந்தே
ஆசகல் சங்கா ரந்தான்
அடைந்திடும் எல்லை மட்டும்
நேசமார் உயிர்கட் கெல்லாம்
நீடுநல் அருளை நல்கும்
தேசுடை நீர்மைத் தென்றே
செப்புவர் பெரிய ரம்மா 136

724 வாய்ந்தநல் இட்ட லிங்கம்
வருகுரு தீட்சை பண்ணி
ஏய்ந்தவிவ் விலிங்கந் தன்னை
இறுதிநீ எய்து காறும்
ஓய்ந்திடா துற்ற பூசை
உஞற்றியே உணவுட் கொள்ளென்
றாய்ந்துமே கொடுப்பச் சீடன்
அருத்தியிற் கொள்வதாகும் 137

725 சொல்லுமப் பரார்த்த லிங்கஞ்
சுயம்புவே காண லிங்கம்
அல்லலை அகற்றி காக்கும்
ஆரிடந் தெய்வ தஞ்சீர்
மல்குமா னிடர்க டாமும்
வணங்கிய லிங்க மென்னா
பல்வகைத் தாகு மென்றே
பனுவலும் பகரூந் தானே 138

726 விளங்கிடும் இட்ட லிங்கம்
விரித்திடிற் பலவே கண்டீர்
உளங்கவர் வாண லிங்கம்
உயர்ந்திடும் படிக லிங்கம்
களங்கமில் ரத்ந லிங்கம்
கருதிடு லோக லிங்கம்
வளஞ்செறி சைல லிங்கம்
வகையிவை சிலவாந் தானே 139

727 அயனரி அண்டர் மற்றும்
அசுரரே முனிவோர் தாமும்
நயனுறு கங்கை யாதி
நதிகளின் பாங்க ரெய்திப்
பயனவை பெறுவான் வேண்டிப்
பரார்த்தமாய் லிங்கம் வைத்தார்
இயன்முறை வழுவா வண்ணம்
இயற்றினர் பூசை தானே 140

[வேறு கலி விருத்தம்]

728 ஆதி காரணி அன்னை உமையவன்
சோதி ரூபிணி சுந்தரி மேலைநாள்
ஓதி மாமறை லிங்கம் வழுத்தியே
ஏத மின்றி அரனிடம் எய்தினாள் 141

729 தும்பி மாமுகத் தோன்றல் விநாயகன்
உம்ப ரேத்துநல் ஆல வனத்திடை
எம்பி ரானை இலிங்கத் தருச்சித்தே
பம்பு சீர்வரம் பற்பல பெற்றுளான் 142

730 கந்த வேள்குகன் காதன் மிகவுறீஇச்
செந்தி மாநகர் சேர்ந்து தனிகொடு
நந்து சீர்ச்சிவ லிங்கமும் நாட்டியே
எந்தை தாண்மலர் ஏத்தியின் பெய்தினான் 143

731. அன்ன மாகிநின் றந்தரத் தோடியும்
துன்னு மேனம தாகியுஞ் சோர்ந்தவர்
பன்னு சோதி இலிங்கம் பராவியே
பின்னு மின்னருள் பெற்று மகிழ்ந்தனர் 144

732. பண்டு ராமன் பவவினை நீறவே
இண்டை சேர்முடி ஈசனைச் சேதுவில்
மண்டு மன்பொடு லிங்க மமைத்துமே
கொண்டு பூசனை கூட்டி உயர்ந்தன்ன் 145

733. மாண லங்கொ ளகத்திய மாமுனி
காண மாதுமை தன்னோ டிருந்தருள்
கோண நாதர் இலிங்கம் வழுத்தியே
தாணு வின்னருள் தான்மிகப் பெற்றனன் 146

734. கேது என்னக் கிளர்த்திடு கோள்முனாள்
தீதில் மாந்தைத் திருப்திதன்னிலே
காதல் மிக்கவெங் கௌரிதன் கேள்வனை
சோதி லிங்கங் கொடுதொழு தேத்தினான் 147

735. போற்று சீரி முகமுனி பண்டைநாள்
ஏற்ற மிக்க நகுலேச் சரந்தனில்
தோற்று லிங்கந் துதித்து வணங்கியே
சாற்று மானிட மாமுகம் கொண்டனன் 148

736. அரக்கர் நாயகன் ராவணன் மேலைநாள்
சுரக்கு மன்பினன் சுந்தரத் தோளினான்
சிரத்தில் அக்கணி தேவை வழுத்தியே
வரத்தில் மிக்குயர் லிங்கமும் வர்ங்கினான் 149

737. மற்றப் பீடுடை லிங்க மிராவணன்
கொற்ற முற்றிடற் கேது கொலாமென
உற்ற வானவர் சூழ்ச்சி இயற்றவே
கற்ற வர்புகழ் கோகன மாயிற்றே 150

738. தொடுக்கும் மாதவத் தூயமார்க் கண்டனார்
எடுக்கும் லிங்கத் தியற்றிய பூசனை
அடுக்குங் காலனை வென்றிவ் வவனியில்
நடுக்கி லா நிலை நம்பிக்கு நல்கிற்றே 151

739. பூவை மேனியன் பொன்மகள் மார்பினன்
சேவை ஏறியை லிங்கத் தருச்சித்தே
ஓவு நேத்திர மொன்றினைச் சாத்திமுன்
வாவு சக்கர வான்படை கொண்டனன் 152

740. மைத்தலைத் தக்கன் மையலுந் தீர்ந்துபின்
சித்தர் சேர்புகழ் காசியில் லிங்கமே
வைத்து மாதவ மாற்றியே வானிடை
நத்து நற்கண நாதனு மாயினான் 153

741. ஆற்று மன்பில் அறுபத்து மூவராம்
ஏற்றம் மிக்க சிவனடித் தொண்டர்கள்
சாற்று நற்குரு லிங்கமே சங்கமம்
போற்றி நாளுஞ் சிவபதம் புக்கனர் 154

742. சொன்ன தொண்டருள் முப்பதின் மேலவர்
பன்னு சீர்ச்சிவ லிங்கநற் பூசனை
தன்னை என்றுமே தாமினி தாற்றினார்
உன்னு சீர்ப்பர முத்திய துற்றனர் 155

[வேறு அறுசீர் விருத்தம்]

743. அன்னவை நிற்கச் சோதி அவிரொளி லிங்கம் என்னா
பன்னுவர் பதிற்றி ரண்டு பயின்றிடு சோம நாதம்
மன்னுமல் லிகார்ச்சுனந்தான் மாகாள லிங்கம் மேலும்
துன்னுகே தார லிங்கம் துயர்தவிர் திரியம்ப கேசம் 156

744. பீமசங் கார லிங்கம் காசிவிஸ் வேச லிங்கம்
நாமமார் வைத்ய லிங்கம் நாகேச லிங்கம் மேலும்
ஏமமார் ராம லிங்கம் தாருக லிங்க மின்னும்
நேயமார்குச்மே சலிங்கம் நினைத்திடிற் பெறலாம்பேறே 157

745. அடல்வலி மிக்க வாணன்
ஆயிரங் கரங்கள் கொண்டோன்
கடனது வழுவி டாமே
கருதியே லிங்கம் வைத்தே
தடவரை மங்கை பாகன்
தாண்மலர் அருச்சித் தேத்திப்
படர்தரு கங்கை தன்னில்
பராவியே விடுக்கும் நீரான் 158

746. கங்கையே காளி கார்த்தம்
கன்னிகாச் சிரமம் மேலும்
துங்கமார்லிங்காத் திரியே
தூயதாங் கன்னி யாதி
மங்கலத் தலங்க ளெல்லாம்
வாணனும் லிங்கம் கொண்டு
செங்கையிற் சூல மேந்துஞ்
சிவனையும் பூசித்தானே 159

747. பத்தியில் இணையி லாதான்
பகர்பலி தந்த வாணன்
நித்தனை நியமத் தோடும்
நினைந்துதான் அருச்சித் திட்ட
உத்தம லிங்கம் தன்னை
உற்றிடு மறவோர் தாமும்
நத்துசீர் வாண லிங்க
நற்பெயர் கொண்ட ழைப்பார் 160

748. பண்டைநாள் முனிவோர் சித்தர்
பனிவரைச் சாரல் மற்றும்
மண்டிய அடவிக் கண்ணும்
மருவுசீர்க் குடிளைப் பாங்கும்
க்ண்டனர் இலிங்கந் தன்னைக்
காதலித் தேத்தி நின்றார்
கொண்டனர் கோயி லாக்கிக்
குவலய மாந்தர் நன்கே 161

749 ஆதியில் ஆற்றின் பாங்கர்
அமைந்ததோர் தருவின் நீழல்
சோதியாம் இலிங்கந் தன்னில்
தோன்றியே அருள்சு ரந்தான்
மாதொரு பாக னம்மா
மற்றுமவ் விருட்சந் தன்னை
ஓதினர் தலவி ருட்சம் என்னவிவ்
வுலகோர் தாமே 162

750. நம்பனுந் தோன்றி நாளும்
நல்லருள் புரிந்த லிங்கம்
இம்பரில் இருந்த பாங்கர்
இறைஞ்சினார் யாரு மீண்டிச்
செம்பொனும் மணியுங் கொண்டு
திருவுலாங் கோயில் கண்டார்
உம்பரும் உலகோர் தாமும்
உயர்வழி பாடு செய்தார் 163

[வேறு தரவுக் கொச்சகம்]

751. முன்னவனாம் அமலனுந்தான்
முழுதுயிர்க்கும் அருள்செய்வான்
பின்னுமருள் மூர்த்தமெனும்
பேதங்கள் பலகொள்வான்
பன்னுமவை விரிக்கிற்பிற்
பரந்தோடும் ஆங்கவற்றுள்
மன்னியசீர் ஐயைந்தை
மகேசுவர வடிவமென்பர் 164

752. ஈங்கிவையும் இயம்புகிற்பின்
இன்புதவு போகமொடும்
ஓங்கியசீர் யோகம்பின்
உரைக்கவரு கோரமெனாப்
பாங்குபெற விரியுமெனப்
பன்னுவர்தாம் அறிஞர்கள்
நீங்காத பேரருளால்
நிமலனிவை கொள்ளுவனே 165

(வேறு அறுசீர் விருத்தம்)

753. உமையுடன் சிவனார் மேவும்
ஒப்பிலா நிலையே போகம்
சிமையமார் கல்லால் நீழல்
தென்முகத் திருந்த செவ்வி
அமைதரு யோக மென்பர்
அடன்மலி சலந்ர காலர்
தமையட நின்ற பாங்கு
சாற்றிடிற் கோர மன்னோ 166

754. வித்தக விநாய கன்சீர்
மேவிடு சுப்ர மண்யன்
சித்தனே வீர பத்ரன்
சிவபரற் குள்ள தாய
சத்தியின் வடிவே அன்றிச்
சாற்றிடிற் பிறிதொன் றில்லை
அத்தனார் ஆடல் யார்க்கும்
அறிதரற் பால தாமோ 167

755. மந்திர வடிவ மானோன்
மறைகளுக் கெட்டா எம்மான்
வந்திடு நிலனாய் நீராய்
வளரெரி காலு மாகி
முந்திடு வானாய்த் திங்கள்
முற்படு கதிரே மற்றும்
நந்திடு மான்மா வென்ன
நண்ணுவன் அட்ட மூர்த்தம் 168

(வேறு தரவுக் கொச்சககம்)

756. அப்பணிசெஞ் சடையண்ணல்
அமைந்தசிவ லிங்க முதல்
ஒப்பிலதாம் பல்லுருவம்
உயிருய்ய எடுத்தருள்வான்
அப்பெருமான் அடிபரவி
அறத்தினொடும் அருளுமோம்பிச்
செப்பிடுசீர்ச் சிவானந்தம்
செறிந்துயிர்கள் சிறந்து வாழி 169

757. ஆற்றியநல் லுபதேசம்
அறிந்துகொண்டாய் அப்பாநீ
நோற்றனைமுன் அரனுறையுந்
தளியெடுக்க நுவன்றவெலாம்
போற்றிநின்று உலகேத்தப்
புண்ணியமே புரிதியென்னாச்
சாற்றியுயர் தேசிகனார்
தம்மிருக்கைக் கேகினரே 170

758. சற்குருவும் எழுந்தருளிச்
சாற்றியதாம் மெய்ப்பொருளில்
உற்றவற்றுள் ஒருசிறிதை
உபதேசச் சருக்கமெனச்
சொற்றளமால் அகம்புகுந்து
சிவனருளும் தூண்டுதலால்
பற்றினொடும் விசுவேசச்
சருக்கமினிப் பகர்ந்திடுவாம் 171

உபதேசச் சருக்கம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 758



விசுவேச லிங்கம்

## அருள்புரி காண்டம் இரண்டாவது

## விசுவேசச் சருக்கம்

(தரவுக் கொச்சகம்)

7..9. பரவவரு பெரும்புகழான்
பற்றினர்தம் பற்றாவான்
அரவுடனாய் அதள்புனைவான்
அனைத்துயிர்க்கும் தனிமுதல்வன்
விரவுமெழில் விசாலைகோன்
விபுதனருட் பதம்வழுத்தி
மரபினொடும் விசுவேசச்
சருக்கமதை வகுத்துரைப்பாம் 1

760. அறுவகைத்தாஞ் சமயங்கள்
அவைநிறுவிக் காசிதனில்
உறுபெருமான் விசுவேசன்
உடன்வைகி உயிர்க்குலத்தை
வறுமைமுதற் பிணிவாட்டா
வகைபுரக்கும் பெருமாட்டி
மறுவகற்றும் விசாலைத்தாய்
மலரடிகள் வழுத்திடுவாம் 2

(வேறு அறுசீர் விருத்தம்)

761. செப்பிடும் அவனி யீங்குத்
திருமகள் நேரும் தேரின்
திப்பிய நகரம் யாவுந்
தேவிதன் உறுப்பை மானும்
ஒப்பிலாக் காசி அன்னை
ஒளிதவழ் வதனங் கண்டீர்
இப்பரி சியைவ தன்றி
இல்லையே ஒப்பு வேறே 3

762. பேரெழில் இயற்கை மேய
பெட்புறு நகராங் காசி
வாரணை அசியென் றோதும்
வளந்திகழ் யாறி ரண்டின்
சாரினி லமைத லானே
சாற்றினர் தொல்லோர் தாமும்
ஏருறு வார ணாசி என்னுநற்
பெயர்தான் கொண்டே 4

763. நீதிசேர் பெரியோர் நெஞ்சில்
நின்றபே ரன்பி னாலே
ஓதுசீர்க் காசி தன்னை
உயர்ந்த வானந்த கானம்
தீதுதீர் அவிமுத் தம்மே
செப்புநல் ருத்ர வாசம்
ஆதியாம் பெயர்க ளிட்டே
அழைப்பரால் நாளுந் தானே 5

764. அறத்தினின் இருக்கை காசி
ஆகரம் அருட்குக் காசி
பிறப்பெனுங் கடல்க டக்கப்
பெருமபுனை தானுங் காசி
திறத்தொடும் ஆங்கு வாழ்தல்
சிவனருட் பேறே யாகும்
சிறப்பெலாம் தெரிப்ப ரார்தாங்
காசிபோல் பதிவே றில்லை 6

765 பண்டொரு காலந் தன்னிற்
பலகலை உணர்வி யாதன்
எண்டிசை பரவுங் காசி
எய்தியுள் மயக்கந் தன்னால்
வண்டிமிர் துளவம் பூண்ட
மாயவன் றானே யார்க்கும்
விண்டிடின் மேலோன் என்று
விளம்பியே நின்றா னம்மா 7

766. அன்னது கேட்டே நந்தி
அடுசினம் மிக்கோ னாகித்
துன்னுமவ் வியாச னார்க்குத்
துணிபரம் பொருடான் தேரின்
பின்னுசெஞ் சடைய னல்லால்
பிறரிலை எனத்தெ ருட்ட
சொன்னது தேறி நின்றான்
சுருதிகள் வகுத்த மேலோன் 8

767. வார்புனற் கங்கை மூழ்கி
வந்துமே விசுவே சர்தாள்
சீர்பெறத் தொழுது நின்றார்
செப்பிடும் வியாச மேலோன்
ஏர்மிகும் ஆட லொன்றை
இயற்றிட விழைந்தான் எம்மான்
பேர்பயில் காசி வாணர்
கனவிலே போந்து நின்றான் 9

768. லந்திடு வியாச ருக்கு
வளநகர் மாந்த ருள்ளார்
தந்திடல் வேண்டா ஐயம்,
தவிர்கெனச் செப்பிப் போந்தார்
பந்தமில் முனிவர் கோனும்
பகலொரு ஏழு காறும்
நொந்தனர் பசியி னாலே
நுவலரும் வெகுளி யுற்றான் 10

769. பவவினை மாற்று கின்ற
பகீரதி படிந்தே ஆடி
சிவனருட் செய்கை யாலே
ஐயமும் கிட்டா தாகத்
தவனுமே கடிஞை தன்னைத்
தண்டினால் உடைத்தெ றிந்தான்
அவமுறு வெகுளி முந்த
அடைந்தனன் வீதி தன்னை 11

770. காசியம் பதிவ ளங்கள்
கணமதில் அழிந்து பாழாய்த்
தேசெலாந் தீர்ந்து போகித்
திசையுளார் இகழ இன்னே
பேசிடு சாபந் தந்தே பெயர்
குவன் என்னா எண்ணிக்
காசகல் சீட ரோடே
கலங்கஞர் கொண்டு சென்றார் 12

771. ஆதியில் ஆதி எங்கள்
அன்னபூ ரணிவி சாலை
மாதினோர் வடிவு தாங்கி
வந்துமே கபாடம் நீக்கி
தீதிலா இல்ல மீதில்
திருந்துநல் அமுத முண்டு
போதிரால் என்ற ழைத்தார்
புகுந்தனர் நீரு மாடி 13

772. ஏவரும் உணவுட் கொள்ள
இலையினை வைத்தார் அன்னை
தாவரும் நீர்தெ ளித்துத்
தகுந்தமந் திரமும் சொல்லி
மேவர உண்ணு மென்றாள்
மேலவர் அதுவே செய்தார்
ஓவற உணவு தானும் உற்றதால்
திகைத்தார் உண்டார் 14

773. பன்னுமப் போழ்தின் கண்ணே
பரவுசீர் விசுவே சர்தாம்
துன்னென வியாசர் முன்னே
தோற்றியே காட்சி தந்தே
என்னைநீ கொடிய சாபம்
இடுவனே எனவெ குண்டாய்
அன்னதால் காசி நீத்தே
அகலுதி விரைவி னென்றார் 15

774. அயாமுத லாய தீர்த்த
அன்னையாம் விசாலை போந்து
துவாபர முனிசெய் புன்மை
தாங்குதல் கரும மென்ன
வியாகுலந் தணிதி யென்னா
விளம்பினன் எமையாள் ஐயன்
வியாசரும் இறையை வாழ்த்தி
விழைந்தன பெற்று வந்தார் 16

775. காசியில் ஆலயங்கள்
கணிப்பில உளவா மேனும்
வாசநீர் மலரிட் டேத்த
வளர்சிவ லிங்கத் துற்றே
நேசமார் விசாலை யோடும்
நித்தலும் அருளை நல்கும்
தேசுயர் விசுவே சர்தம்
திருத்தளி சிறந்தே ஓங்கும் 17

776. பரவினர்க் கிகபோ கம்பின்
பரமுத்தி தானும் நல்கும்
அரனுமே விசுவே சப்பேர்
அமைதர அருளி நின்றான்
கரவினர் காணா அண்ணல்
கண்ணுதல் அவனைத் தொண்டர்
திரமொடும் விசுவ நாதத்
திருப்பெயர் கொண்டும் சொல்வர் 18

777. மாயிரும் பௌவம் சூழ்ந்த
மகிதலத் துறையும் மாந்தர்
ஆயிரத் தெட்டே என்னா
அறைதரு சிவால யத்துள்
பாயிருள் அகற்றல் போந்த
படரொளி ஞாயி றென்றே
வாயினால் வழுத்து கிற்பார்
வளர்விசு வேச்ச ரத்தை 19

778. மாண்புயர் விசுவே சப்பேர்
மன்னுசீர் லிங்கம் போன்றோ
ஏண்டகு காசி யென்னும்
இசைவளர் பதியும் போன்றோ
காண்டகு மணிகர் ணிகைப்பேர்
கலிபுனற் றீர்த்தம் போன்றோ
நீண்டுயர் உலகம் மூன்றில்
நிகர்ப்பன பிறவே றில்லை 20

779. தெய்வதக் கங்கை யாடித்
திசையெலாம் போந்தி றைஞ்சும்
ஐயனை விசாலைத் தாயை
அகத்தவி சிருத்தி ஏத்தி
மையறீர் எழுத்தைஞ் சோதி
முத்திமண் டபத்தி ருந்து
செய்தவம் போல்வே றீங்குச்
செப்பிடின் மாந்தர்க் கில்லை 21

(வேறு எண்சீர் விருத்தம்)

780. சீரோங்கு சிவதளிகள் ஆய வற்றுள்
சிவலிங்கத் திருமேனி தொட்டே யன்பர்
நீரோடு மலர்கொண்டு நேய மிக்கே
நின்றுவழி பாடியற்றும் நீர்மைத் தென்பர்
காரோடி முகிலிடித்து மழையே சிந்தி
கருதுபல வளங்களுமே நிறைந்து நாளும்
பாரோர்கள் புகழ்காசிப் பதியி னோடு
பருப்பதமே கோகரணம் அன்னவாமால் 22

(வேறு அறுசீர் விருத்தம்)

781. காசியிற் கோயில் கொண்ட
கறைமிடற் றையன் தானும்
மாசிலா ஈழந் தன்னில்
மருவுசீர் யாழ்ப்பா ணத்தே
வாசமார் தருக்க ளோங்கு
வட்டுமா நகரந் தன்னில்
நேசமோ டமர்ந்தே யாடல்
நிகழ்த்திட நினைந்தா னன்றே 23

782. கங்கையைச் சடைமிலைச்சி
காதினிற் குழையுந் தோடும்
அங்கையில் மழுவும் மானும்
அரைதனிற் புலியின் தோலும்
துங்கநல் மார்பு தன்னில்
துவளுமுந் நூலுந் தாங்கி
மங்கையாள் விசாலை மேவ
மறையவன் என்ன நின்றான் 24

783. தொண்டருக் கெளிய சோதி
தோகையுந் தானும் எண்ணி
எண்டிசை போற்ற வட்டூர்க்
கெழுந்தருள் பரிசு தேரின்
வண்டிமிர் தொல்லை ஊரோர்
வளர்தவப் பயன தென்கோ
பண்டைநாள் அப்பா ஞானி
பண்ணு புண்ணிய மதென்கோ 25

(வேறு அறுசீர் விருத்தம்)

784. நாடு போற்ற நல்லைநகர்
நண்ணி ஆட்சி புரியரசார்
பீடு மிக்க பரிசனருள் பேசுஞ்
சீர்த்தி மிகவுடையோன்
தேடு தெய்வேந் திரமுதலி
தீதில் கொடியில் வந்தோனாம்
நீடும் புகழார் கணபதியார்
நிகழ்த்து தவத்தின் வடிவானோன் 26

785. முந்தும் புகழின் தமிழ்தேர்ந்து
மொழியுங் குரவன் அடி சார்ந்து
நந்துஞ் சித்த நூல்மாந்தி
நாடுஞ் சைவ நூலோர்ந்து
வந்த மாந்தர் பிணிதீர
மருந்து நல்கி அறனோம்பி
இந்து தவழுஞ் சடையண்ணல்
இருதாள் நெஞ்சில் இருத்திடுவான் 27

786. நானம் முதலா அநுட்டானம்
நாளு மாற்றிச் சிவபூசை
தானும் நிகழ்த்தி இறையன்பிற்
றடித்து நின்ற தகையாளன்
ஆன செல்வ வளமனைத்தும்
அரனார் பணிக்கே உதவிடுவோன்
கோனாய் உயரப் பாமுதலி
குழந்தை உள்ளங் கொண்டவர்காண் 28

787. வசையில் வட்டூர்க் கொள்ளோலை
வந்தே அமர்ந்த உக்கிரர்க்கிங்
கிசையும் பூசை சிறப்புவிழா
எனைத்துங் குறையா வகையியற்றி
திசையோர் ஏத்திப் பரவிடவே
தினமுந் தொண்டு புரிதருவோன்
அசையா அன்பன் அடித்தொண்டன்
அக்கும்நீறும் அணிகுரவன் 29

788. அன்பே அருளே அறமுதலா
அரிய குணங்கள் படைத்துடையான்
இன்பே சீலம் ஈகையெனா
இசைக்கும் நலங்கள் இனிதுடையான்
முன்பே மணிமந் திரமருந்து
முறையாய்த் தேர்ந்த திறலாளன்
துன்பே பிணியே தீர்த்திடுவான்
தூய்மை பேணும் நடையுடையான் 30

789. தொட்டார் பிணிகள் போக்கிடுவான்
தொலையா மனநோய் வகையெல்லாம்
விட்டே அகலும் இவற்கண்டு
விரவும் இலங்கை மணிநாட்டில்
நட்டே புகநழ நாட்டியுளான்
நன்றாஞ் சிவாறு பூதியினோன்
முட்டாச் சிறப்பின் மூதறிஞன்
முறுவல் சிந்தி அணைத்திடுவான்

790. எங்கும் ஆகி நின்றருள்வோன்
இயல்தான் அறிய ஒண்ணாதோன்
மங்கை பாகன் மழுவுடையோன்
மாயோன் மலரோன் அறிவரியான்
கங்கை விரவும் காசியினைக்
காதலித்த விசுவேசன்
துங்கத் துணைத்தாட் போதிரண்டும்
மறவாத் தூய சிந்தையினான் 32

791. இல்லற ஞானி இவனென்கோ
இசைசேர் யோகி இவனென்கோ
வல்ல குரவன் இவனென்கோ
வாழுஞ் சித்தன் இவனென்கோ
தொல்லைப் பிரம சரியத்தின்
தூய வரம்பும் இவனென்கோ
அல்லல் தீர்த்தே எமையாண்ட
அப்பா முதலி அவர்தம்மை 33

792. அன்றோர் நாளில் இரவதனில்
அமைந்த எளிய உணவருந்திப்
பின்றாழ் சடையெம் பெம்மானைப்
பெருகுங் கருணைக் கடலானைக்
குன்றா அன்பின் உளத்தெண்ணிக்
குலவுந் திருவைந் தெழுத்தோதி
என்றும் போலத் துயில்கொண்டார்
ஏந்தல் அப்பா அமளிதனில் 34

793. அப்பா முதலி உளந்தனிலே அந்தர
நின்றோர் அருட்சோதி
தப்பா வகையின் உட்புகவே
தலைவர் கண்டார் சொப்பனமே
எப்பரி செனினுங் காசியிருந்
திலிங்கம் கொணர்ந்து பிரதிட்டை
இப்பதி தனிலே இயற்றுவியென்
றிறைவன் புகன்ற சொற்கேட்டார் 35

(எண்சீர் கழிநெடிலாசிரிய விருத்தம்)

794. அப்பணியுஞ் செஞ்சடையான் அருளைப் போற்றி
ஆனந்தப் பெருங்கடலின் மூழ்கி நிற்பார்
இப்பெரிய செயலதனை இயற்ற யானும்
ஏற்புடையன் கொல்லென்ன ஏங்கிச் சோர்வார்
செப்பரிய சிவலிங்கத் திருமே னிக்கண்
சிவபரனும் தோன்றியருள் புரிந்து போந்த
ஒப்பிலருட் செயலனைத்தும் உள்ள வாறே
உளத்திரையில் ஓடிடவே கண்டுவப்பார் 36

795. மாவினது பின்போதித் திண்ண னார்தாம்
மன்னுதிருக் காளத்தி லிங்கந் தன்னை
ஆவதனை விட்டகலாக் கன்றே யென்ன
அன்புமிக மூண்டெழவே போற்றி யாங்கண்
மேவிநின்று துயிலிலராய்க் காவல் பூண்டு
விருப்பினொடு மஞ்சனமும் பூவுந் தாங்கி
ஏவணிந்து வில்லேந்தி மறையோன் காண
இயற்றுதிருத் தவத்தினது நீர்மை யோர்வார் 37

796. தொண்டுபயில் திண்ணனார் செய்கை யெல்லாம்
தொல்புவிக்குக் காட்டிடுமோர் தன்மை போல
மண்டுதிருக் காளத்தி யப்பர் செந்நீர்
வழிந்திடவே வலக்கண்ணில் காட்டி நின்றார்
கொண்டுபல அவுடதங்கள் தந்தார் அந்தோ
குறைதீரா வகைநடுங்கி ஊனுக் கூன்தான்
உண்டுமருந் தெனவுணர்ந்து கண்ணி டந்தே
உமைகோனுக் கணிந்துமகிழ் பான்மை தேர்வார் 38

797. காளத்தி இறையாங்கே இடக்கண் மீதும்
கடிதாகச் செந்நீரும் சிந்த நின்றார்
மூளத்தம் உள்ளத்தே அன்பு நம்பி
முன்போல இடக்கண்ணுற் இடக்கும் வேளை
நீளத்தங் கரங்கொண்டே ஈசன் தானும்
நில்லுநில்லு கண்ணப்ப எனப்பி டித்தே
ஆளத்தான் எம்மடிகள் வலத்தில் மேவும்
அன்புருவின் தகவெல்லாம் ஓர்ந்து வப்பார் 39

798. திருக்கடவூர் வருகலயர் இருந்து மனிபர்
தினந்தோறும் குங்குலியத் தூபந் தானே
உருக்கமுடன் இடுதலையே கடனாய்ப் பின்னும்
உற்றெழுந்த இலம்பாடும் நீங்கக் கண்டார்
இருப்பனந்தாள் லிங்கமது சாய மன்னன்
திகழ்படைகள் கொண்டீர்த்தும் நிமிராப்போழ்தில்
பெருற்குமன்பாற் கழுத்திலே வடமிட் டீர்ப்ப
பிஞ்ஞகனார் நிமிர்ந்ததிறம் தன்னைக் காண்பார் 40

799. சிவமறையோன் விசாரசன்மன் சேஞ்ஞ லூரான்
சிவாகமமே முதலான தேர்ந்த செம்மல்
அவமகன்றே ஆயினங்கள் மகிழ்ந்து வாழ
அன்புடனே கைக்கயிறுங் கோலுங் கொண்டே
சிவனருளால் சிவபூசை செய்வான் உன்னி
சிவலிங்கம் மண்ணதனால் இயற்றி வைத்துத்
தவமெனவே படிவரிசைப் பால்கொண் டாட்டும்
தன்மைகனை எண்ணிமனம் நைந்து நிற்பார் 41

800. இந்தவிதம் சிவசருமர் பூசை பண்ண
இருந்திட்ட பார்ப்பனர்கள் இகழ்ச்சி செய்ய
தந்தையவர் பூசைகளைச் சிதைத்தா ராக
தனயனுந்தான் தண்டதனை எறிந்த வேளை
விந்தையிலும் விந்தைதந்தை தாளி ழந்தார்
விண்மிசையே சிவனாரும் உமையும் மேவி
வந்தவரைத் திருக்கரத்தாற் றழுவி நின்று
வாய்மலர்ந்த விதமெல்லாம் எண்ணி நிற்பார் 42

801. மறைபாபு அடுகின்ற அடிகள் தாமும்
மற்றும் நீநம்பாலே வைத்த அன்பால்
இறையான நின்றாதை விழவெ றிந்தாய்
இனித்தாதை நினக்குயாம் எனவி யம்பி
முறையானே சண்டீசப் பதமும் கொன்றை
முடியணியும் தந்தசெயன் முழுது மெண்ணிப்
பிறையாளன் தொண்டர்நா யகமே யான
பெம்மானின் பெற்றியெலாம் நினைந்து வப்பார் 43

802· சாத்தமங்கைத் திருப்பதியார் நீல நக்கர்
சந்ததமுஞ் சிவனடியே பேணுஞ் சீரார்
காத்தளிக்கும் அயவந்தித் தளியு ளன்று
கண்ணுதலை மனையோடுஞ் செபிக்குங் காலை
ஏத்துமுயர் லிங்கத்தே எங்கி ருந்தோ
இழிந்ததுவால் சிலம்பியொன்றம் கதனைப் பார்த்த
மாத்திரத்தில் மனையாளும் வாயா லூத
மற்றதுவும் நீங்கியதால் மகிழ்ந்தார் அன்னை 44

803. அதுகண்டே அநுசிதமாஞ் செயல தென்றே
ஆயிழையைக் கடிந்தனரால் அமைதி இன்றி
இதுதன்னை நீக்கிடலாம் இன்னொன் றானே
என்செய்தாய் அன்பிலியே ஏற்கேன் என்றார்
கதுமெனவே இலஞ்சென்றார் நக்கர் தாமும்
காதலியும் அங்கிருந்து கண்ணீ' வார்ந்தார்
உதுகொண்டே அயவந்தி அண்ணல் தோன்றி
உற்றணைந்தே அருள்செய்த திறம்வியப்பர் 45

804. தண்டலைசூழ் திருச்சங்கை மங்கை வந்தார்
தமிழ்காஞ்சிச் சாக்கியராம் தலைவர் தாமும்
கொண்டசிவ சமயமொன்றே நெறிக டம்முள்
குற்றமில தென்றுணர்ந்த கொள்கை யாளர்
அண்டர்தொழு பரமரருள் லிங்கந் தன்னை
அடுத்திடுகற் கொண்டெறிந்தே அருச்சித் தேத்த
மண்டுமன்பின் அவர்செயற்கும் மகிழ்வுற் றையன்
வார்கழலில் இடந்தந்த மாண்பு தேர்வார் 49

(வேறு எண்சீர் விருத்தம்)

805. தெய்வீகத் தேனுமுதற் பசுவினங்கள்
சிவனவனை அருச்சித்தே இலிங்கந் தன்னில்
மெய்யருளைப் பெற்றதனால் மேன்மை சான்ற
வியன்கருவூர் ஆனிலையை ஆமாத் தூரை
உய்வுதரும் ஆவடுதண் துறையைப் பின்னும்
ஒப்பிலதாந் திருப்பெண்ணா கடத்தைத் தானும்
ஐயனவர் அகத்தெண்ணி வழுத்து கின்றார்
அன்றிரவில் அருட்கடலுட் டிளைத்து நின்றார் 47

(வேறு அறுசீர் விருத்தம்)

806. கோணா மலையாம் உயிரன்பன்
கொன்றை வேணிப் பெருமானைத்
தாணா ளும்பணிந் தேத்திடுவோன்
தாழ்வில் தொல்பு ரப்பதியான்
வாணாள் பெற்ற பயனெய்த
வார ணாசி வாழ்வுடையான்
ஏணார் சித்தர் அப்பாவின்
எண்ணந் தனிலே வந்துற்றான் 48

(வேறு அறுசீர் விருத்தம்)

807. காலை யெழுந்தார் அப்பாவுங்
கடன்கள் முடித்துக் களிப்புடனாய்
ஆல யந்தான் புக்கணைந்தே
அரனார் பாதம் பணிந்தெழுந்தார்
சீலம் மிக்க பெரியோர்கள்
சிலரைக் கூவிச் செய்திசொலிக்
கோலஞ் சான்ற சிவலிங்கம்
கொள்ளும் பரிசு குறித்தாய்ந்தார் 49

808. பண்ணிய பூசைப் பயனாலே
பரவுங் காசி நகர்வாழும்
அண்ணல் கோணா மலையர்க்கே
அப்பா முதலி அவர்தாமும்
வண்ணம் பயிலுஞ் சிவலிங்கம்
வாங்கும் வகைநீ உதவென்னா
நண்ணுங் கேண்மைத் திறனாலே
நன்றும் ஓலை போக்கினரே 50

809. ஓலை கண்டார் உளமகிழ்ந்தார்
ஓங்குங்கங்கைத் துறையெல்லாம்
நீல கண்டர் நின்றருளும் நிகரில்
லிங்கங் கொண்டிடுவான்
காலை மாலைப் போதுகளில்
கடமை யுடனாய் முயல்வுற்றார்
கோலம் மிக்க ஒருமுதியோன்
கூடை யுடனாய்ப் போந்தனனே 51

810. வாண லிங்கம் பலவுளவால்
வாங்கிக் கொள்வீர் அன்புடையீர்
காணற் கரிய திறத்தனவாம்
கங்கை அன்னை தந்தனகாண்
பேணும் விலையும் சிறிதேதான்
பெரியீர் கொள்மின் எனத்தந்தான்
கோணா மலையார் விலையென்னோ
கூறு மென்றார் மகிழ்வோடே 52

811. அன்னோன் குறித்த விலைதானும்
அதிகம் போலும் எனவெண்ணி
பின்னே காண்போம் என்பராராய்
பெரியார் தமதில் புக்கனரால்
என்னே காசி விசுவேசர் இரவில்
அப்பா இடம்வந்தே
இன்னும் நூறு கூட்டியந்த இலிங்கந்
தன்னைப் பெறுதியென் றார் 53

812. அரவம் பூண்ட ஆதிபரன்
அருத்தி கொண்ட அந்தணன்போல்
இரவம் முதியோன் இல்லெய்தி
இன்னும் நூறு கூட வைத்துப்
பரவும் வாண லிங்கமதைப்
பற்றி னோடு வருமவர்க்கு
மரபின் அளித்து மகிழ்கென்றே
மறைந்தான் மொழிந்தே மற்றம்மா 54

813 அடலே றுடையான் ஆல்நீழல்
அறமே புகன்ற குருநாதன்
கடலே அனைய கருணையினான்
காசி அமரும் விசுவேசன்
இடனாய் நின்றே அருள்கொழிக்கும்
இலிங்கம் அப்பா பெற்றனரால்
தடமார் சோலை வட்டூரார்
தவமே தவந்தான் உலகீரே 55

814. தெய்வக் கங்கைப் புனலாட்டிச்
சிர மீதிருத்தி அருள் பெருக்கும்
ஐயன் நீல கண்டத்தோன்
அங்கி விழியோன் மழுவேந்தி
துய்யசூல பாணியனார் தூய
அருளின் குறியதனை
உய்யும் திறமே உன்னினராய்
உவகையுடனே கொண்டனரே 56

815. சீரார் காசிப்பதி நின்றும்
செய்ய சடையன் அருளாலே
ஆரா அன்பர் ஆனந்தம்
அடைந்தே துள்ளிக் கூத்தாட
ஏரார் சோலை பயில்வட்டூர்
இன்பம் என்றும் பெருகிடவே
பாரோர் வாழ இலிங்கமதைப்
பௌவ மூடு கொடுபோந்தார் 57

816. இலிங்கம் வந்து சேர்ந்திடலும்
இறைவன் அருளை நனிவாழ்த்திக்
கலங்கா வுள்ளம் உறுமப்பா
காதன் மிகவே பிரதிட்டை
நலங்கொள் வகையில் நடத்தவெண்ணி
நவையில் மூகூர்த்தம் தேர்ந்தேதான்
இலங்குஞ் சைவ ஆகமங்கள்
இசைக்கும் வகையிற் பணிபூண்டார் 58

817. ஓதுங் கொள்ளோ லைப்பதியில்
உற்ற கோயில் வளாகத்தில்
காதலுடனாய்ச் சிவபரற்குக்
கர்ப்பக்கிருகம் அமைத்திடுவான்
தீதில் கணிமார் வகுத்தவிடந்
தேர்ந்தே அகழ்ந்து சென்றிடுகால்
ஆதி தாளைச் சிவதளியோன்
றாங்கண் இருந்த திறங் கண்டார் 59

818. கிடையாய் அமைந்த கற்களையும்
கீண்டே போந்து நனியகழ்ந்து
படையாய் கற்கள் பரவுவித்துப்
பணிகள் அனைத்தும் முற்றுவித்துச்
சடையான் அமர்ந்தே அருள்கொழிக்குந்
தகைசால் இலிங்கம் நிறுவுதற்காம்
அடைவால் அழகுக் கருவறைதான்
அமைப்பித்தனரால் அருத்தியொடே 60

819. உற்றவிமானத் தளமீதில்
உயருங் குடக்கிற் சிவனுமையை
மற்றும் வடக்கிற் பிரமனொடு
வலனார் துர்க்கா தேவிதனைச்
சொற்ற குணக்கில் லிங்கத்தைத்
தோன்று தெற்கில் தென்முகரைப்
பற்றும் கதைதான் கொண்டாங்கே
பலரும் போற்றச் செய்வித்தார் 61

820. கூறிந்துவசத் தம்பத்தின்
குலவுஞ் சாரில் எழில்விஞ்ச
வீறுபடைத்த வினையெல்லாம்
விலக்கும் விகட கணபதிக்கும்
மாறில் வகையில் இடந்தந்தே
மதித்தே யாரும் போற்றிடவே
ஆறே சூடும் அரனார்க்கும்
ஆலயந்தான் அமைப்பித்தார் 62

(வேறு கலித்துறை)

821 எண்ணி இன்னணங் கருவறை இனிதுறவியற்றித்
திண்ணி தாகவே அருத்தமே முதலவாச் செப்பும்
வண்ண மேவுமண் டபங்கை பலவுமாய் வகுத்தே
அண்ண லார்தமக் கழகுற வாலயம் எடுத்தார் 63

822. மூல மூர்த்திதன் தென்புறங் கணபதிதனக்கும்
நீல மாமயில் நிமலனுக் கிடப்புறந் தனிலும்
கோல மார்தரு சிறுசிறு தளிகளுங் குயிற்றி
மேலு மாலயம் எழில்பெற இயற்றுவித்தனரே 64

823. அம்பி கையவள் அருமறை தனக்குமே அமையாச்
செம்ப தத்தினள் திருநெடு விழியினள் தெரிக்கின்
உம்பர் கோன்விசு வேசனார் இடப்புறத் திருப்பாள்
நம்பு நர்நவை நணுகுறா வகையினி தருள்வாள் 65

824. அன்னை தன்திருக் கரந்தனின் அம்புயம் உடனாய்த்
துன்னு சக்கரப் படையதுந் தரித்திடு செயலால்
மன்னு ராசரா சேஸ்வரி எனவரு பெயரால்
பன்னு வாரவர் பழவடித் தொழும்பரும் பணிந்தே 66

825. செப்பு சீர்க்கரு வறையதன் பாங்கரில் நடனத்
தொப்பை யப்பனும் துலங்குதென் முகமுடைப் பரனும்
ஒப்பி லாதலிங் கோற்பவர் குடக்கொடு வடக்குத்
திப்பி யங்செறி துர்க்கையும் பிரமனுந் திகழ 67

826. ஆத்த னார்தம தாணையின் வழிவகை அவனி
காத்த ளித்திடு நவமுறு கோளொடு மற்றும்
ஏத்து சண்டியாம் இறைக்குமிங் கெழிலது பெருகப்
பாத்து மேபல கோட்டமும் பண்ணுவித் தனரால் 68

827. எந்தை யார்க்குமே இனியனாய்ப் பிரம்பொடு நிலவு
சுந்த ரஞ்செறி நந்தியந் தேவனும் மற்றும்
வந்து யர்பலி பீடமும் வனப்புடன் நிறுவி
முந்து சீர்க்கொடித் தம்பமும் முற்றுவித் தினிதாய் 69

828. ஆல யந்தனை வலம்வரற் கமைதரு வகையிற்
கோல நீடுநற் பிரகாரமே முதலவுங் குயிற்றி
மேலு மஞ்சனக் கிணறுமே விளங்கிட நிறுவி
நீல கண்டரின் நிகேதன மியற்றுவித் தனரே 70

(வேறு அறுசீர் விருத்தம்)

829. கருணைசெறி அப்பாவும் ஆலயத்தின்
கவினொழுகு கோலங் காண்பார்
அருணிலவு கயிலைமலை அமைதிதனை
அடுக்குமென அகம்ம கிழ்வார்

குருமலருங் காசியென ஓகைவிஞ்சிக்
கூறிடவுங் கூடு மென்பார்
உருகுமன்பிற் பிரதிட்டைக் குற்றதினம்
உவந்தெவர்க்கும் உரைத்து நிற்பார் 71

830. பிரதிட்டைக் கிரியையெனப் பேசவரு
தனிவிழவின் பெற்றி கேளீர்
கருவறையுள் இலிங்கமதைத் தாபித்து
மந்திரத்தால் நியாசம் பண்ணி
மருவியென்றுஞ் சாந்நித்தியம் உடன்மேவி
மதியணிந்தோன் அனைத்துயிர்க்கும்
திருவருளை வழங்கிடவே நிகழ்த்துபெருஞ்
செய்கையதாம் மேலும் செப்பின் 72

831. பேசுபிர திட்டையுந்தான் ஆவர்த்தம்
அநாவர்த்தம் புனரா வர்த்தம்
மாசகற்றும் அந்தரியம் எனவளர்ந்து
மன்னிநிற்கும், ஆயுங் காலை
நேசமுடன் நிகழ்த்துகிற்பார் நீண்டவாயுள்
நிறைசெல்வம் புதல்வர்ப்பேறு
ஈசனரு ளாலெய்தி இகபரத்தே
இன்பநலம் துய்த்திடுவர் இனிது தானே 73

832. அண்ணலார் திருத்தளிகள் அற்றிருக்கும்
அகன்பதியுள் புதுவ தாக
விண்ணளவு கோபுரமும் விமானமுதற்
பற்பலவும் மேவும் வண்ணம்
பண்ணியுயர் குடமுழக்கும் பசுபதிக்குக்
குரவர்தமைக் கொண்டுதானே
புண்ணியர்கள் இயற்றுவிக்கும் பிரதிட்டை
அநாவர்த்தம் புகலும் காலே 74

833. நீடுபல காலமதாய் நித்தியநை
மித்தியங்கள் நிகழும் வேலை
ஊடுவரு மண்மாரி உற்றிடுதீ
கடலிவற்றால் ஊறு நேர்ந்தால்
கூடுதிறம் திருத்தியதைச் செப்பனிட்டு
மேனாட்போல் குலவும் வண்ணம்
தேடுமுறை ஆற்றுபிர திட்டையதே
ஆவர்த்தம் செப்பும் காலே 75

834. பாமருவும் அறிவர்கடாம் பகர்ந்தவாறு
பண்ணுநித்ய நைமித்திகங்கள்
தாமுடைய திருக்கோயில் தனிலுயர்ந்த
கோபுரமே விமான மாதி
சேமமுற எடுப்பித்து வேறுபல
திருப்பணியும் முற்று வித்துக்
காமுறவே யாற்றுபிர திட்டைபுனர்
ஆவர்த்தம் கருதுங் காலே 76

835. கடியாருங் கடுக்கைபுனை கறைமிடற்றோன்
கருணைசெறி தளியினுள்ளே
மிடியாரும் மாந்தர்தாம் எவரேனும்
மேவிநின்று மரித்த போதும்
கொடியார்கள் திருடர்கள் உட்புகுந்தே
அனர்த்தங்கள் செய்த நாளும்
நெடிதாக இயற்றுபிர திட்டையுந்தான்
அந்தரிகம் நிகழ்த்துங் காலே 77

836. சீர்மிகவே இயற்றுபிர திட்டையுளே
செய்கருமம் பலவென் பாரால்
ஏர்பெறவே அன்னவற்றை நூல்களுந்தான்
எடுத்துரைக்கும் அவற்றினுள்ளும்
பேர்விரியும் அநுக்ஞைமுதல் அறுபத்து
நான்குதனைப் பெரிதே பேணி
நேர்தரவே ஆசான்மார் நிகழ்த்துவரால்
நேயமுடன் நினையுங் காலே 78

(வேறு கலிவிருத்தம்)

837. வட்டு மாநகர் வந்துயர் வான்றளி
சிட்ட ரும்பெருஞ் சாந்தியுஞ் செய்யுநாள்
இட்ட மாகவே செப்பிட ஊருளோர்
இட்ட மாயலங் காரமி யற்றினார் 79

838. பந்தர் இட்டனர் பட்டுவி தானமும்
அந்த ரத்திடை கட்டினர் அன்பொடு
முந்து தோரணம் மாலிகை தூக்கினர்
இந்தி ரன்புரி யீதென ஆக்கினர் 80

839. வாயி லெங்கணும் வாழையும் பூகமும்
நேய மிக்குமே நின்றிட நாட்டினர்
மேய வான்சிக ரங்களும் வைத்தனர்
கோயில் முற்றுமே கோலமும் செய்தனர் 81

840. மேய சென்னியில் வெண்பிறை சூடிடும்
நாய கன்விசு வேசனின் நல்விழா
ஏய சீர்மிக எய்துக என்றுமே
வாயில் எங்கணும் கும்பமும் வைப்பரால் 82

841. நந்தி யங்கொடி நல்லொளி வீசியே
இந்தி ராதியர் யாரையும் இங்கெழீஇ
முந்தி வம்மென முட்டிய ழைப்பபோல்
சந்தி தோறுமே தானுயர்ந் தாடிடும் 83

(வேறு அறுசீர் விருத்தம்)

842. பொறிமயிர் வாரணங்கள்
பொன்னெடுந் தேர்மீ தேறிச்
செறிகதிர்ச் செல்வன் வானில்
திகழொளி விரித்துத் தோன்ற
அறிதரு கட்டி ந்தான்
அறைந்திடு வகையாம் என்ன
வெறிமலர்க் கொம்பர் தோறும்
மேவியே கூவு மாலோ 84

843. தருக்களின் மலர்க டோறுந்
தாவியே மணம ளைந்தும்
இருக்கொடு பாட லெங்கும்
இசைத்திடு மனைகள் புக்கும்
பெருக்குதீம் புகைப டிந்தும்
பின்னுநல் வாசந் தோய்ந்தும்
அரும்புடன் மலர்சு மந்தும்
அருங்கடித் தென்றல் வீசும் 85

844. காரிருள் கடிது நீங்கக்
கண்ணுதல் குடமு ழுக்கை
நேரிலே காண்பன் என்னா
நிறைகதிர்க் கரங்க ணீட்டி
ஏருறு காட்சி யோனாய்
ஏழ்பரித் தேரி லேறிச்
சீருறு மொற்றை யாழிச்
செங்கதிர்ச் செல்வன் போந்தான் 86

845. தாரகா கணங்கள் முற்றுந்
தகைமலி பந்தர் தோறும்
ஏரவாந் தரளங் கொண்டே
இயற்றிய செம்மை நோக்கி
நேரிலே நிற்க வெள்கி
நெடிதுசேண் சென்ற வாபோல்
பாரினர் காண்டற் கில்லாப்
பரிசினின் நீங்கிற் றம்மா 87

846. மூாத்தமும் அடுத்த நாக
முழங்கிடுங் கொம்பு சங்கம்
சீர்த்திசால் மணியி னோடு
குழலொலி யாழு மோங்கும்
பேர்த்துமே தட்டை தாளம்
பேரிகை முழவ மெல்லாங்
கார்த்தடங் கடலின் மாறாய்க்
கலித்துமே ஒலித்து நிற்கும் 88

847. இந்திரா தியர்கள் வந்தார்
இயக்கரே நாகர் சித்தர்
அந்தர வான நாடர்
அட்டமா திக்கோர் போந்தார்
சுந்தர அரப்பை மாதர்
தோகைமா மயில்கள் மாணச்
சிந்தனை மகிழ்ந்து நின்றே
செய்தனர் நடனம் அம்மா 89

878. வான்படர் தெங்கின் காய்கள்
வரையெனக் குவிந்து தோன்றும்
தேன்மிகு குடத்தி னோடுதித்
திக்கும் கனியும் விஞ்சும்
ஆன்தரு பசும்பால் நெய்யும்
அருஞ்சுவைத் தயிரும் மல்கும்
மான்மத முதலா யுள்ள
வாசனைப் பொருள்கு லாவும் 90

349. வேதகா னத்தி னூடே
வேதியர் மூதல்வன் றானுங்
காதலாற் கிரியை எல்லாங்
கருதியே இயற்றி முற்றி
ஆதியான் விசுவே சன்றான்
அமர்ந்தருள் இலிங்கந் தன்னை
ஓதிய விதிவ ழாமல்
உயிர்பிர திட்டை செய்தான் 91

850. எரிதனை ஓம்பி யாகத்
திருத்திய குடத்து நீரில்
அரியனாம் இறைவன் றன்னை
அமைதர ஒடுக்கி வைத்தே
உரிமையால் அபிடே கித்தங்
குயர்சிவ லிங்கம் போந்து
பெருகருள் சுரக்க வைத்தான்
பெரியனாங் குரவன் றானே 92

851. பெற்றிடு பசும்பால் எங்கும்
பெற்றம துடலில் உண்டே
மற்றது மடியின் மாட்டுச்
சுரந்திடு மாட்சி என்னக்
கற்றையஞ் சடையெம் அண்ணல்
கருதிடில் யாண்டு முள்ளான்
உற்றவன் இலிங்கந் தன்னில்
உயிர்களுக் கருள்வன் கண்டீர் 93

852. போற்றிடு பூசு ரர்தாம்
பொற்புறு கலசம் வைத்தே
ஆற்றிடு குடமு ழுக்கும்
அருத்தியின் இயற்றி மேலும்
ஏற்றணி கொடியி னானுக்
கியைவன யாவுஞ் செய்தே
சாற்றியே ஆசீர் வாதம்
தாமுமே இயற்றி நின்றார் 94

853. செந்தமிழ் மறையின் ஓசை
திசையெலாம் பரவி ஓங்கும்
வந்திடு வேத கீதம் வானுல
களாவி நிற்கும்
அந்தமில் அன்பர் செய்யும்
அரகர ஒலியும் மல்கும்
இந்தநல் விழவு காண
இயற்றினன் மலரோன் கண்கள் 95

854. முந்துசீர் முதலி அப்பா
மொழிதரு கலியாப் தத்தே
ஐந்தொடு பத்தடுத்த
ஐம்பதாம் ஆயி ரத்தில்
வந்துயர் பிரமா தீசம்
வாய்த்தசித் திரைமு லத்தில்
எந்தையாம் விசுவே சற்கே
எடுத்தனர் குடமுழுக்கே 96

855. மண்டல எல்லை காறும்
மாண்புறு விழவே யாற்றி
அண்டலர் அரணந் தேய்த்த
அண்ணலார் விசுவே சற்குத்
தொண்டினர் யாருங் கூடித்
தூய்மையும் நோன்பும் பேணி
எண்டிசை யோரு மேத்த
இன்பமே சூழ்ந்து நின்றார் 97

856. மண்டலா பிடேக மாண்பை
மரபொடு தெரிக்கின் ஐயன்
விண்டநற் சிருட்டி மற்றும்
வியன்திதி சங்கா ரந்தான்
கொண்டிடு திரோபவம்பின்
கூறனுக் கிரக மெல்லாங்
கண்டபல் உயிர்கட் காகக்
காட்டிடும் ஆடல் அன்றோ 98

857. ஆங்கனம் வாய்ந்த பூசை
அருஞ்சிவ ஞானம் நல்கும்
ஓங்குநல் எரிவ ளர்த்தல்
உற்றசம் பத்துச் சேர்க்கும்
தாங்குநற் செபமு மாங்கே
தகித்திடும் பாபந் தன்னை
வீங்குசீர்த் தியானம் முத்தி
விளைத்திடும் என்பர் மேலோர் 99

(வேறு கலிநிலைத்துறை)

858. முன்னு சீர்பயில் விழவுமே முடிவுற முழங்கி
மின்னி மாமழை பொழிந்தது விரிநில முழுதும்
துன்னு சாலியுங் கூலமுஞ் செழித்தன தொடர்ந்தே
மன்னு மான்குலம் பயனனி சுரந்தன யாழி 100

859. தெண்ணி லாவணி சடையனின் திருவிழாக் கண்டே
விண்ணு ளார்களும் விரிநிலத் துளார்களும் எவரும்
கண்ணி லின்பமுங் கருத்தினில்உயர்ச்சியும் இசையிகி
உண்ணி லாவரும் உவகையே பரந்திட லுற்றார் 101

860. எண்ணு தொண்டரார் இதயதா மரைமுகை விரியப்
பண்ணு புண்ணியம் பலித்தென உளமிகமகிழ்ந்தார்
நண்ணு நோய்நொடி நகர்விடுத் தகன்றிட இங்கண்
எண்ணி எந்தையின் இணையடி பரவியேயிருப்பார் 102

861. பாடுசீருறு பசுபதி புகழெலாம் விரித்தே
ஈடுபாடுடன் இணையடி இறைஞ்சுவர் அப்பா
கூடுமன்பினிற்சிவநெறித்தொண்டரைத்தொழுவார்
நாடுவாழ்வது நலனுறு பெரியரா னன்றோ 103

862. மாலை யாயது மலையசம் படர்ந்ததுவானில்
நீலகண்டரின் நிறையருள் குவிதிற மெனவே
பாலதாகிய நிலவினைப் படியினோர் பருகக்
கோலமோடுமோ குவித்தனன் மதியமும் மகிழ்ந்தே 104

(வேறு அறுசீர் விருத்தம்)

863. ஆதியெங் கடவுளர்க்கும்
அற்றைநாள் முதலதாக
வேதியர் தம்முள்மிகிகோர்
விதிமுறை வழுவிடாமே
ஓதியவைக றோறும்
உவந்தும மூன்றுவேளை
பூதலம் இனிதுவாழப்
பூசனை புரிந்தார்நன்கே 105

864. நித்திய பூசைதன்னில்
நிகழ்தரு தாழ்வு தீரச்
சத்திவேற் குமரன்றன்னைச்
தந்திடு தாதையார்க்கு
நத்துதல் அன்பினோடு
நவின்றிடு மகோற்சவந்தான்
வித்தக வட்டூர் வாணர்
விதிவழு வாமே செய்வார் 106

865. அன்றொரு வைக லப்பா
அருந்துயில் நீத்தெ ழுந்தே
நன்றுமே தூநீராடி
நல்லனுட்டா னம்பண்ணி
ஒன்றிடும் அன்பு முந்த
உடையவர் பூசை முற்றிப்
பொன்றிகழ் மடியுடுத்திப்
பூதியும் அக்கும் பூண்டு 107

866. கனியொடு மலரும் மற்றும்
காண்டகு திரவியாதி
இனிதெனத் தட்டி லேந்தி
ஏற்றமார் கொள்ளோலைக்கே
பனிமலை வல்லி பங்கன்
பண்ணவன் பூசை காணக்
கனிவுடன் புகுந்தா ரம்மா
கலைவிதம் தேர்ந்த செம்மல் 108

867. தொலைவினிற் றோன்றி நின்ற
தூபியைக் கண்டு வாழ்த்தி
அலைவிலா துள்ளே போகி
அருங்கொடித் தம்பத் திப்பால்
நிலையுடன் நின்று போற்றி
நேயமும் பெருகி ஓங்க
மலைவகல் நந்தி யார்பால்
மரபுடன் விடையுங் கொண்டார் 109

86 . கணபதி தாள்பணிந்து
கருத்துடன் அடிபெயர்த்தே
அணைவுறு வணக்கம் யாவும்
ஆற்றியே ஒருபான் மேவி
துணையென விசாலை யோடும்
தோற்றுசீர் விசுவேசர் தம்
இணையடி பரவு கின்றார்
இருவிழி ஆறா தாக 110

(வேறு தரவுக் கொச்சகம்)

869. முன்னலர் தம் புரமூன்றும்
ஒறுத்தருளி உடன் றுவந்தே
இன்ன றரும் கடுவிடத்தை
எடுத்தயின்று களத்துவைத்தாய்
கன்னலள இன்மொழி யார்
விசாலைபயில் விசுவேசா
வன்னவயற் கொள்ளோலை
வாழ்முதலே முன்வாராய் 111

870. வராயினிநீ யென்பதிலை
வல்வினைகள் நீக்கியருள்
பராபரனே புலியதளும்
பணியணியும் பரித்ததெனே
இராவினிலே நடமிடுவாய்
இறையோனே கொள்ளோலை
விராவிவளர் திருக்கோயில்
வீற்றிருந்தாய் இரங்குதியே 112

871. இரங்கிடெந்தாய் எனவேண்டி
எழிற்பூவை வணன்முனைநாள்
வரங்கிடப்ப வந்தவர்க்கும்
வழங்கினைநீ அருள்ளமிர்தை
கரங்குவிப்பார் அரந்தையெலாம்
கடிதேக அருளுதியே
பரம்பொருளே கொள்ளோலை
பண்ணவனே தாள்போற்றி 113

872. போற்றிநின்றேம் நின்முகத்துப்
புன்முறுவல் காணவெந்தாய்
மாற்றரிய பசும்பொன்னே
மாமணியே சுடர்க்கொழுந்தே
கோற்றொடியார் விசாலையொடும்
வட்டூரிற் கொள்ளோலை
வீற்றிருந்தாய் கடைக்கணித்து
வேண்டுவர மீதியின்னே 114

873. இன்னேநின் தொழும்பாளும்
எளியமெலாம் உளங்களிப்ப
மன்னேயோ மறிகடலின்
வந்துதியா அமிர்தேயோ
அன்னேயோ துணையிலியேம்
அருட்குருவே ஆகரமே
தன்னேரில் கொள்ளோலைத்
தயாநிதியே காவாயே 115

874. தயாநிதியே கொள்ளோலைத்
தனிமுதலே விசுவேசா
அயாவுற்ற ராவணர்க்கும்
அருள்சுரந்தாய் அருத்தியுடன்
வியாகுலங்கள் சரண்புகுந்தார்
வேண்டிடவே விலக்குவைநீ
பயோததியின் நஞ்சயின்றாய்
பண்ணவர்கள் தொழவன்றே 116

875. அன்றேயெங் குடியினர்க்காய்
காசிவிடுத் தேகிவந்து
பொன்றாது சிந்துகொன்றைப்
போதணியும் விசுவேசா
நன்றாய வட்டூரில்
நங்கையொடும் வந்தமந்தீர்
மன்றாடு மா மணியே
மற்றினியிங் கிடருமுண்டோ 117

876. உண்டேதான் இன்னருளும்
என்றேங்கி நைந்துருகித்
தொண்டருளார் வளாகமுற்றும்
சூழ்ந்துநின்றார் தூமணியே
வண்டாடிப் பண்பயிலும்
வண்ணவயல் வட்டூராய்
அண்டரெலாம் விரைகின்றார்
அமையமீதே அருள் செய்யே 118

877. செய்யெல்லாங் கயலுகளும்
சீர்த்திமலி வட்டூரார்
உய்யவரு விசுவேசா
உயர்சூலப் படையாளி
ஐயவிடை விசாலையினை
அணைத்தருளும் அருட்கடலே
வெய்யவினைத் தொடரகற்ற
வேண்டுமருள் விடையவனே 119

886. கண்ணினுள் மணியும் நீயே
கருத்தினுள் உணர்வும் நீயே
பண்ணினுள் நின்றன் சீர்த்தி
பாடிட அடங்கா தம்மா
திண்ணிய உள்ளம் வேண்டும்
திருவொடு கல்வி வேண்டும்
எண்ணிய எண்ணி யாங்கு
இயற்றிட அருளும் வேண்டும் 128

88 . அருட்பெருஞ் சத்தி நீயே
அனைந்தையும் இயற்ற வேண்டி
பரையொடும் ஆதி இச்சை
பரவுசீர் கிரியை யோடும்
உரைதரு ஞான மென்னா
உற்றுயர் பான்மை தேர்ந்தேம்
விரைதவழ் கொள்ளோ லைசேர்
விசாலையே போற்றி போற்றி 129

888. என்றெலாம் ஏத்தி ஏத்தி
இயைந்திடு பிரகா ரத்தே
துன்றிய மூர்த்தி யானோர்
துணைமலர்த் தாள்கள் போற்றி
நன்றுமே எழுத்தைந் தோதி
நக்கனார் அடியை எண்ணி
ஒன்றிய உணர்ச்சி மேவ
ஒப்பிலா இன்பம் பெற்றார் 130

8 9. தொண்டருக் கதிப ராகித்
தூயநல் அன்பி னாலே
விண்டசீர் விசுவே சர்தம்
விரிசடைக் கொன்றை மாலை
கொண்டுயர் சண்டே சர்தம்
குரைகழல் பணிந்து நின்று
உண்டுமே பிரசா தந்தான்
உவகையோ டுறையுள் புக்கார் 131

[வேறு அறுசீர் விருத்தம்]

882. உலகினை ஓம்பிக் காக்கும்
ஒப்பிலா இறைவி யேயோ
இலகிடு பவங்கள் நீக்கும்
ஏந்திழைக் கண்ணி யேயோ
அலகிலாக் கலைகள் காணா
அமரியே ஆர ணங்கே
மலரணி சோலை வட்டூர்
வளமுற வந்தாய் நீயே 124

883. நீயலா துலக மில்லை
நிறையருட் குன்றே போற்றி
தாயெனப் பேணு கின்றாய்
தாவில் கொள்ளோ லைமேயாய்
பாயொளி ஓசை யூறு
பயில்சுவை நாற்ற மென்ன
ஏயவள் நீயே யறோ
ஏழையேந் துயர்து டைப்பாய் 125

884. ஏழையேந் துயர்து டைக்க
இன்னுமேன் தயங்குகின்றாய்
மாழைமெல் அடியி னாளே
மனமதை உருகச் செய்யாய்
வாழையுங் கமுகும் ஓங்கு
வட்டுமா நகரில் அன்னாய்
பீழைகள் மோத நொந்தேம்
பிறர்துணை உண்டோ அம்மா 126

885 உண்டிகொல் பணியு மென்றே
உம்பரும் கடைக்க ணின்றார்
விண்டுவும் பிரமனாரும் விருப்புடன்
மேவிப் போந்தார்
கண்டுநேர் மொழியி னாளே
கனியன அதரந் தாளே
மண்டுசீர் அருளை நல்காய்
மலர்நெடுங் கண்ணி னாளே 127

886. கண்ணினுள் மணியும் நீயே
கருத்தினுள் உணர்வும் நீயே
பண்ணினுள் நின்றன் சீர்த்தி
பாடிட அடங்கா தம்மா
திண்ணிய உள்ளம் வேண்டும்
திருவொடு கல்வி வேண்டும்
எண்ணிய எண்ணி யாங்கு
இயற்றிட அருளும் வேண்டும் 128

887. அருட்பெருஞ் சத்தி நீயே
அனைந்தையும் இயற்ற வேண்டி
பரையொடும் ஆதி இச்சை
பரவுசீர் கிரியை யோடும்
உரைதரு ஞான மென்னா
உற்றுயர் பான்மை தேர்ந்தேம்
விரைதவழ் கொள்ளோ லைசேர்
விசாலையே போற்றி போற்றி 129

888. என்றெலாம் ஏத்தி ஏத்தி
இயைந்திடு பிரகா ரத்தே
துன்றிய மூர்த்தி யானோர்
துணைமலர்த் தாள்கள் போற்றி
நன்றுமே எழுத்தைந் தோதி
நக்கனார் அடியை எண்ணி
ஒன்றிய உணர்ச்சி மேவ
ஒப்பிலா இன்பம் பெற்றார் 130

889. தொண்டருக் கதிப ராகித்
தூயநல் அன்பி னாலே
விண்டசீர் விசுவே சர்தம்
விரிசடைக் கொன்றை மாலை
கொண்டுயர் சண்டே சர்தம்
குரைகழல் பணிந்து நின்று
உண்டுமே பிரசா தந்தான்
உவகையோ டுறையுள் புக்கார் 131

890. சிவனருள் தானே செல்வம்
என்றுமே செப்பி நிற்பார்
சிவனருள் தானே கல்விச்
சிறப்பெனப் பன்னு கிற்பார்
சிவனருள் தானே வீரச்
செவ்வியென் றோது கிற்பார்
சிவனருள் தானே அல்லாற்
செயலெதும் இல்லையென்பார் 132

891. கண்ணினுட் பாவை மற்றுங்
காயத்துள் ஆவி தன்னைப்
புண்ணியப் பயனாய்ப் பெற்ற
புதல்வனைப் புரத்தல் போன்றும்
பெண்ணினுள் நல்லாள் உற்ற
பதியினை ஓம்பல் போன்றும்
அண்ணலார் முதலி யப்பா
அரன்றளி காக்கின் றாரால் 133

(வேறு அறுசீர் விருத்தம்)

892. அண்ணலவர் விசுவேசர் அற்புதங்கள்
அளவிலவாம் அறையுங் காலை
எண்ணியிவை தமைவிரித்தல் இயல்பிலவாம்
எனப்பெரியர் இயம்பு கிற்பார்
விண்ணவர்கோன் உள்ளிருந்தே ஊக்குவிக்கும்
உணர்வதனால் சிலவா மேனுந்
தண்ணளியீர் செப்பலுற்றாம் தகையிலியேம்
செய்கைதனைத் தாங்கிக் கொள்வீர் 134

893. எம்பெருமான் திருக்கோயில் அலுவலெலாம்
ஏதமின்றி இனிதின் மன்னும்
அம்பிகையாள் உடனமர்ந்தே அமலனருள்
நிலவதனைப் பொழிந்து நிற்பான்
நம்புமடி யார்களுளார் நவையகன்று
நாளெல்லாம் தொழுது போற்றி
உம்பர்கடம் நாட்டினுயர் இன்பினொடும்
இட்டசித்தி எய்தி நிற்பார் 135

894. எங்கேனும் காணகில்லாக் காட்சியதால்
எம்பெருமான் திருமே னிக்கண்
மங்கலமார் அருள்வரைகள் வளர்ந்தருளி
மாண்புமலி கோலங் காட்டும்
அங்கணபி டேகமொடும் அலங்காரம்
அந்தணரும் ஆற்றி மேலும்
துங்கமுறு தீபவொளி காட்டுங்கால்
சொலவரியசுகமும் மேவும் 136

895. பண்டொருகால் ஊர்முற்றும் பதைபதைப்பப்
பரவியதால் பேதி நோயும்
தொண்டருளார் தொழுதெழுந்து நீராடித்
துதிபாடி போற்றி செய்தே
வண்டாரும் பொழில்புடை சேர் கொள்ளோலை
வாழ்பரனே தஞ்சம் என்னா
மண்டுமன்பின் விசுவேசர் அருள்திறத்தை
மூதாளர் வழுத்து கிற்பார் 137

896. செய்வானும் செய்வினையும் சேர்பயனும்
சேர்ப்பவனும் தேர்ந்தே தானும்
மெய்வகையில் நான்காக விரித்துரைக்கும்
சைவநெறி நின்ற மேலோன்
தையறனை இடத்திருத்து தற்பரனாம்
முக்கணுடை மூர்த்தி யாய
ஐயனருட் றளிபுகுந்தே அன்புடனாய்
அருச்சிக்கும் தன்மை யாளன் 138

897. என்றும்போல் ஆலயத்தில் எழுந்தமணி
விளித்தழைக்க ஓசை கேளா
வன்றுயிலும் நீத்தெழுந்தே வருகடன்கள்
முற்றியபின் நீரு மாடி
வன்னமுறு துணியதனை வரித்தன்பின்
அக்கணிந்து நீறு மாடிப்
புன்னரெனும் மூதாளர் போயினரால்
விசுவேசர் சோயி லுக்கே 139

898. அரக்ரவென் றேத்தினராய் உட்புகுந்தா
ராலயத்தை நோக்கு கின்றார்
பரவுமொளி வெள்ளமதன் பிரவாகம்
பரந்தெங்கும் வீசி நிற்கும்
கருவறையுட் கதிர்கோடி ஒன்றிணைந்தே
ஒளிபெருக்குங் காட்சி தோன்றும்
வருபதங்கள் நிலந்தோயா வகைநின்று
வானவர்கள் வழுத்து கிற்பார் 140

899. நடுநடுங்கி நாக்குழறி நாதவென
அரற்றுகிறார் நிலத்து வீழ்ந்தார்
கிடுகிடுத்து வலம் வந்தார் கிடைப்பரிய
நற்காட்சி மறைந்த தாக
கெடுவிலராய் இல்புக்கார் செயலிழந்து
மௌனியென கீழே சாய்ந்தார்
படுதுயிலில் தனைமறந்தார் பண்புடையார்
பழவினைதான் பகரப் போமோ 14

900. காலைதனில் துயில்நீத்தார் காட்சியெலாங்
கட்டுரைத்தார் கண்ணீர் வார
ஆலதன்கீழ் நால்வர்க்கும் அற்றைநாள்
அறம்விரித்தே இற்றை நாளில்
சோலைபயில் வட்டூர்வாழ் விசுவேசர்
திறமனைத்தும் சொல்லிக் கொள்வார்
சீலமொடு வழிபாடு செய்திருந்து
சிவன்கழலே புன்னர் சேர்ந்தார் 142

901. விரவுபுகழ் அப்பாவும் விருப்பினொடு
மருந்துசெய வேற்றூர் செல்வார்
இரவதனில் வருவழியில் ஏதமெதும்
இவர்தமக்கே எய்தா வண்ணம்
அரவணியும் விசுவேசர் அவருடனாய்
முன்போந்தே இல்லம் எய்தக்
கரவுடனாய் மறைந்திடுவார் தவப்பயனே
காசினியிற் பெரிதாம் அம்மா 143

902. அடியருளார் அருட்குருவை வேண்டுகிற்பின்
விசுவேசர் அளித்து நிற்பார்
மிடியகற்றிச் செல்வவளம் விழைந்தார்க்கு
மேவிவந்து நல்கு கிற்பார்
கொடியபிணி வந்திடவே அறுவைசெயக்
கூடவிருந் தருளுர் செய்வார்
வடிவுடைய மழுவேந்தும் எம்மடிகள்
வான்கருணைக் கெல்லை உண்டோ 144

[வேறு கலித்துறை]

903. கரிதனின் உரியர் வருபுலி அதளர் கங்காளர்
அரிபடர் விழியர் அணிகுழல் அரிவை இடைமேவ
விரிதரு கழனி விரவிடு வட்டூர் விசுவேசர்
தெரிவரு புகழர் திருவடி பரவ எழுவீரே 145

904. நறைமலர் உடனாய் நளிர்புனல்சடையில் உறவேதான்
கறைமிட றுடையர் அரவணி கவின வட்டூரில்
உறைதர லுடையர் ஒருமக ளுடனாய் விசுவேசர்
இறையவ ரவரின் இணையடி தொழவே வருவீரே 146

905. தாயினு மினியர் தழுவிடு மழுவர் திரிசூலர்
மாயிருளிடையே மணிநட மிடுவர் வளமார
ஆயிழை யுடனாய் அருளுவர் வட்டூர் விசுவேசர்
ஏயிடு மவரின் இணையடி பணிய எழுவீரே 147

906 விழவொளி யுடனா முழவொலி பயிலும் வட்டூரார்
எழிலது தவழும் இறையவ னினிதே இடமாக
அழலெழ அவுணர் புரமவை அடுவர் விசுவேசர்
கழலடி பரவக் கடிதினி லெழுதிர் இனிநீரே 148

907. நீறணி திருவர் நிறைமலர் புனைவர் நீரோவா
ஆறணி சடையர் அழகின ரடிகள் விசுவேசர்
கூறணி விடையர் குலவிடு புகழர் அனையோடும்
பேறுள அருளவர் பெற்றிட வருதிர் வட்டூரே 149

908. கண்ணுறு நுதலர் கவினுயர்
பிறையர் கடுவுண்டே
விண்ணவர்க் கருளும் விகிர்தரெம்
அடிகள் விடைமேலர்
பெண்ணமர் வடிவர் பெருகொளி
உருவர் விசுவேசர்
நண்ணினர் அருள நவையிலை
வருவீர் வட்டூரே 150

909. கருதிடும் அடியர் உளமதி
லுறைவர் கடிதாக
மருவிடு துடியின் இடைமயில்
பயிலும் விசுவேசர்
பெருகிடு புனலின் இறவொடு
கயலும் பிறழ் வட்டூர்
வருதரு முதல்வர் கழலடி
தொழவே வருவீரே 151

910. அறமது புரியுஞ் செயலினர்
உரவோர் அகமேவும்
திறலது உடையர் செறிதரும்
இறைவி யுடனாகி
நறவுறு மலரின் பொழில்பயில்
வட்டூர் விசுவேசர்
அறைகழல் பரவ அமையமி
தெழுவீர் வருவீரே 152

911. மனமெனு மலரின் மருவிடும்
இயல்பின் விசுவேசர்
அனமெனு நடையர் அமிழ்துறழ்
மொழியாள் துணைமேவ
இனமல ரிடையே மதுகர
முரல்வட் டூரொளி
வனசமெல் லடியே தொழுதெழ
இனியே வருவீரே 153

(வேறு தரவுக் கொச்சகம்)

912\. அன்பருளீர் யாத்திரைக்காய்
அவனிமுற்றும் சுற்றுகிறீர்
துன்பகலும் மிடிதீருந்
துய்த்திடலாஞ் சுவர்க்கநலஞ்
முன்புகுந்தே வட்டூரிற்
கொள்ளோலை வலம்வரீஇ
இன்புடனே சிரதலத்தில்
கைகுவித்தே இறைஞ்சுமினே 154

913\. எடுத்தெற்றி அலைமொழிக்கும்
இனியதிருப் பாற்கடலை
அடுத்துற்றுக் கடைதருநாள்
அஞ்சவெழு நஞ்சுகண்டே
நடுக்குற்று வானோர்கள்
நம்பாநீ ஒலமென
மடுத்துண்ட வட்டூரில்
விசுவேசற் றொழுதெழுமே 155

914\. பொங்கரவம் பூணாடை
புலியதளோ டுண்கலமே
கங்காள மாலையணி
கண்ணுகலாள் கௌரியுடன்
இங்குள்ளான் எழுபிறப்பின்
எவ்வுயிர்க்கும் இதம்புரிந்து
சங்கரனாம் அவனைவட்டூர்த்
தளிபுகுந்து வழுத்துமினே 156

915\. என்றுருகி நின்றுநெக்கி
எம்பெருமான் பொன்னடிகள்
நன்றுபணிந் தேத்திடவே
நாடுசெல்வங் கல்வியுடன்
குன்றாத நல்லிளமை
கொற்றமுறு பல்வளனும்
என்றாதை விசாலைக்கோன்
ஈந்தருள்வான் இதுதிண்ணம் 157

916. அருள்விரிக்கும் விசாலாட்சி
அன்னைதனை இடங்கொண்டோன்
வெருளகற்றும் உயிர்முதல்வன்
விரிபுகழில் அணுவேனும்
பொருள்பரக்கும் தீந்தமிழில்
புங்கவனின் அருளதனால்
மருள்கெடுக்கும் விசுவேசர்
சருக்கமென மகிழ்ந்துரைத்தாம் 158

917. பைங்குதலைச் செங்கனிவாய்ப்
பாலகனாய் மயிலேறி
மங்கையுமை மடித்தலத்தும்
மருவுமென்றன் சிரத்தலத்தும்
துங்கமுறு பதம்வைத்த
சுப்ரமண்ய சுவாமியவர்
இங்குவரு சருக்கமினி
இன்புடனே எடுத்துரைப்பாம் 159

விசுவேசச் சருக்கம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 917



வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியசுவா

அருள்புரி காண்டம்

## சுப்பிரமணியசுவாமி சருக்கம்

(அறுசீர்கழிநெடில் ஆசிரிய விருத்தம்)

918. மணிசேர் முடிகள் விரிகதிரும்
வதனத் தொளிரும் அருணிலவும்
பணிகள் உதிர்க்கும் பிரபையதும்
பரந்தே நிலவத் தாயரொடும்
அணியார் சோலை வட்டூரை
ஐயன் சிவசுப் பிரமணியன்
தணியா வேட்கை யுடைனடைந்த
சருக்கந் தன்னை இனிமொழிவாம் 1

919. திகழும் ஞானத் திருவுருவே
சீரார் விசாலை மகிழ்கோவே
புகழும் கல்லால் மரநீழல்
பொருந்தி அறஞ்சொல் புண்ணியனே
நிகழுங் கருணைத் தடங்கடலே
நீரார் வட்டூர் நின்மலனே
உகழுந் துன்பப் பேராற்றில்
உற்றே அழுந்தா வகையருளே 2

920. கூடுங் குடிலைப் பொருளோனே
குழந்தை உருவில் வருகுருவே
வாடும் பயிர்க்கு வான்மழையாய்
வற்றாக் கருணை பொழிமுகிலே
பாடும் அடியார்க் கெளியையெனப்
பகரும் மொழியும் பழுதாமோ
நீடுந் தடத்தோட் சுப்ரமண்ய
நின்றாள் துணைகாண் காத்தருளே 3

921. மாயன் உதவும் மலர்க்கொம்பை
மகவான் போற்றும் மாநிதியை
நேயம் பயிலும் வாரணத்தை
நிலவுங் கிரியா சத்திதனைச்
சேயர்க் கென்றும் அருள்கூட்டுஞ்
செவ்வேட் கடவுள் புடைமருவுந்
தூய கனிவாய்க் குஞ்சரியைத்
தொழுது பவநோய் துடைத்திடுவாம் 4

922. திருமால் மகளாய் நம்பியயில்
செய்ய தவத்தின் வந்தெய்தி
ஒருமான் மகளாய்த் தினையோம்பி
உவந்தே படுபுள் ளவைகாத்துப்
பெருமான் சிவசுப் பிரமணியன்
பெருகுங் காதல் கொண்டணைய
வருமா நிதியாய் அவதரித்த வள்ளித்
தாயை வழுத்திடுவாம் 5

923. மன்னுஞ் ஞான சத்தியதாய் மயிலூர்
மகிபன் மலர்க்கரத்தில்
துன்னித் தகுவர் இருள்துடைத்துத் தூய
கருணை நிலாப்பொழிந்து
தன்னை வழுத்துந் தொழும்பருக்குத்
தாழ்வில் பேறு பலவழங்கி
மின்னும் கதிர்வேல் தொழுதெழுந்து
மேவும் பவநோய் மாற்றிடுவாம் 6

[எழுசீர் கழிநெடில் ஆசிரிய விருத்தம்]

924. மானமர் கண்ணார் மாதுமை யஞ்ச
வருகரி யுரிதனைப் போர்த்தித்
தேனமர் தாமஞ் செஞ்சடைக் கணிந்து
இனப்புலி வரியதள் அசைத்துக்
கானமர் நவ்வி கைமிசை யேந்திக்
கடுமுரண் விடைமிசைச் சிவனும்
வானவர் பூதர் மாலயன் பணிய
வளமலி கைலையில் அமர்வான் 7

925. அன்னவன் றானுங் குணங்குறி இல்லான்
அனைத்துளும் கலந்துள னேனும்
துன்னுபல் லுயிர்க்குந் தோன்றிடாத்
துணையாய் துய்யவின் னருளினைக் கூட்டிப்
பின்னுமே அன்னை அத்தனே சேயாய்ப்
பிறங்கருட் குரவனு மாகிப்
பன்னுபல் வடிவங் கொண்டுமுன் நின்று
படர்ந்தெழு வினைவளம் தீர்ப்பான் 8

926. முந்தையோர் காலந் தன்னிலே மூக்கண்
மூர்த்தியைச் சிறுவிதி இகழ்ந்து
புந்திமா லுற்று பொருக்கெனப் போந்து
புரிதரும் மகத்தினிற் கலந்து
தந்திடும் அவியை உண்டபல் விண்ணோர்
தம்மையும் வினையார் வாட்ட
நொந்தனர் கயிலையஞ் சாரல் மேவி
நோற்றனர் பல்பகல் தானே 9

927. செம்பொனின் மேனிச் சிவபரன்
வானோர் சிந்தைசெய் வகையது தேர்ந்தே
அம்பர மீதில் ஏற்றினின் வந்தே
அருள்கொடு நோக்க மற்று
எம்பரா பரனே சூர்ப்புயல் எற்ற
எய்த்தனம் ஆற்றகில் லேமால்
வம்புலாங் கொன்றை மௌலியாய்
இன்னே வறியமைக் காத்தியென் றிரந்தார் 10

928. நனைத்திடு கங்கை நறாவுதிர் மத்தம்
நாணரா புனைந்துமே உயிர்கள்
அனைத்துமாய் அவற்றின் வேறுமாய்
மன்னி ஐந்தொழில் இயற்றிடும் அரனுங்
கனைத்துமை வாட்டுஞ் சூர்ப்புயல் தடிந்து
காத்தருள் நல்கிட யாமும்
வினைதிறஞ் சான்ற குமரனைத் தருதும்
வருந்தலிர் செல்கென விண்டார் 11

929\. என்றலும் இமையோர் எருதுகைத்
தருளும் எந்தையை வழுத்தியே மிக்குத்
துன்றிடு நோயும் வறுமையுந் துரப்பத்
துடித்திடும் ஏழையாம் ஒருவன்
குன்றன செல்வக் குவையினைப் பெற்றுக்
கொண்டதோர் இன்பினன் என்ன
நின்றனர் எந்தம் அடிகளை யேத்தி
நிறைவுடன் ஏகினர் இனிதே 12

930\. பொன்னுல குயர அமரரின் துயரம்
பொடிபட உலகெலாம் உய்ய
முன்னவன் அருளால் மதிதொட நிவந்து
முழங்கிடும் அருவிகள் உடைத்தாந்
தன்மைசேர் இமயச் சாரலின் மேய
சரவணத் தடமதன் பாங்கர்
என்னருந் தலைவன் சுப்பிர மண்யன்
இளயமா மதலையாய் உதித்தான் 13

931\. மாறிலாக் காமர் முழுதுமே திரண்டு
வளர்ந்தொளிர் படிவம தென்கோ
ஆறுசீர் வதனம் அருள்பொழி விழிகள்
அகன்றெழு பன்னிரு தோள்கள்
ஏறுசீர் ஞானம் இவையெலாங் கூடி
எழுந்ததோர் உருவம தென்கோ
வீறுசேர் கந்தன் சரவணத் தடத்துள்
மேவியே உதித்தனன் மன்னே 14

932\. அன்பினின் விளைந்த திருவமிழ் தன்னான்
அடைந்தவர்க் கினியநற் கடவுள்
துன்பினைப் பிணியைத் தொடர்ந்திடு மூப்பைத்
துரந்திடு சோதியாம் பிரமம்
பொன்புனை வன்னிக் கொன்றையஞ் சடையன்
பொற்புற உதவிடுந் தேவன்
தன்பெருந் தகைமை தானறி யொண்ணான்
சரவணத் தடத்தவ தரித்தான் 15

933. பன்னருந் திரோத சத்தியாய்ப் பயின்று
பவவினை யெவற்றையும் பாற்றிப்
பின்னையும் அருள்செய் சத்தியாய் மேவி
பிறங்குபல் லுயிர்க்கருள் கௌரி
அன்னையு மாங்கண் அருத்திகொண் டத்தன்
அருகுற அனைத்துமே பொய்கை
தன்னுழைப் புகுந்தே ஆறுமா முகனைத்
தழுவியே தளிர்க்கரத் தெடுத்தார் 16

934. ஆதியாய்ப் பிரமந் தானுமாய் அனைத்தும்
அருத்தியிற் பயந்தருள் முதலாய்ச்
சோதியாய் சுடராய் மறையுமாய் மறையின்
துணையுமாய் வருகும ரேசன்
நீதியாய்ப் பரமாய் நின்றிடு சீர்த்தி
நிமலையார் கரதலத் திருப்பத்
தீதிலா வடியர் சிந்தையுள் மன்னுஞ்
சிவபிரான் இன்னருள் செய்தார் 17

935. செய்தபின் ஈசன் திசையுளார் பரவத்
தேவியை ஒருபுறஞ் சேர்த்தி
வெய்யசூர்ப் புயலால் நொந்திடும் விண்ணோர்
வேதனை மாற்றவந் துதித்த
செய்யமுந் நான்கு புயத்தனை எடுத்துச்
சிக்கென நடுவுளே இருத்தி
மெய்மையாம் நெறியில் மேதினி வாழ
மேவியே வீற்றிருந் தனனே 18

936. எம்பிரான் உதித்தான் என்னலுஞ் சுரர்கள்
இன்பமாய்க் கடலிடைத் திளைத்தார்
வம்புலாம் மலர்தூய் வாழ்த்தினர் புகழ்ந்தார்
வாட்டமும் தீர்ந்ததே என்பார்
அம்புயன் அரியே வாசவன் ஆகியோர்
அரனருள் நினைத்துகண் பனித்தார்
இம்பரில் அசுர விருட்குலம் அகலு
மிருஞ்சிறை நீங்குமென் றுவப்பார் 19

937. பராசரன் ஈன்ற மதலைய ராகிப்
பவத்தினான் மீனுரு வெய்தித்
தராதலம் உற்றுச் சரவணத் தடத்தே
தவமது பல்பகற் புரிந்தோர்
விராவரு குமரன் பாலினின் மிச்சில்
மிசைந்தனர் மெய்யுணர் வுற்றார்
பராவியே அவரும் பண்புமேம் படீஇப்
பண்டைய வடிவதும் பெற்றார் 20

938. கண்ணுதற் பெருமான் கந்தவேள்
உடனாய்க்கௌரியுந் தம்பினே தொடர
விண்வழிக் கொண்டு வெள்ளிமால் வரையில்
விளங்குமந் திரத்தினி லிருத்தி
உண்ணிக ழன்பால் உச்சிமோந் துவந்தே
உயர்கணத் தவரெலாம் போற்ற
நண்ணிநீ ஈங்கண் வைகியே நாளுந்
நல்லருள் புரிகென நவின்றார் 21

939. முந்துநல் அபய வரதமே கொண்ட
மூவிரு முகமுடை வள்ளல்
வந்துயர் வலத்துக் கொடியொடு குலிசம்
வேலொடு தோட்டியத் திரமே
தந்தனி இடத்திற் றாமரை மழுவே
தண்டுவில் மணியவை தாங்கி
யந்தரத் தமர ரடிதொழு தேத்த
அடிபெயர்த் துலவியே நிற்பார் 22

940. வந்தவஃகேனம் எஃகம தாக
வளர்தரு முத்தமிழ் முருகா
அந்தமெய் யினமென அமைதரும் ஆறு
முகங்களில் அருணில வுதிர்ப்பான்
முந்திடு மாவி பன்னிரண் டென்ன
மொழிதரு கரங்களைப் புனைப்பான்
நந்துமெய் மூவா றெனவே நவிலும்
நயனத் தருவிநீர் சொரிவான் 23

941. வன்னியுஞ் சூடும்மானவே நின்றும்
மணியொடும் ஒளியெனத் திகழ்ந்தும்
கன்னலும் சுவையும் கட்டியும் ஆகிக்
கண்களும் இன்னருள் காட்ட
பன்னிரு புயத்துப் பகவனு மாங்கே
பதம்பெயர்த் துலவியே பயின்று
என்னையாம் சிவனே இவனென இயம்ப
எங்கணு மாகியே நிற்பான் 24

942. அகரம துடனாய் அடுத்திடும் உகரம்
அணைதரு மகரமு மாகி
பகர்தரு இருமூன் றக்கரம் தானாய்ப்
பாரெலாம் வாழவே யருள்வான்
சிகரநீள் குடுமிச் செம்பொனின் வரையைச்
சேர்ந்தொளிர் கயிலையாம் பொருப்பின்
நிகரிலாப் பதங்கள் நோதர வசைத்தே
நித்தலும் லீலைகள் புரிவான் 25

943. மாலுடன் வானோர் மற்றுளார் தாமும்
வந்துமே ஊர்தியின் இழிந்து
கோலமார் குகனே குமரனே அமுதே
குழகனே குறைவிலா நிறைவே
சாலவும் நொந்தேம் தமியனேம் என்றே
தாரையாய்க் கண்ணினீர் வடிப்பார்
ஆலமுண் டருளும் அமலனின் மதலை
அடிமிசை முடிதொடப் பணிவார் 26

944. கயிலையிற் கந்த வேளவர் விண்ணோர்
கண்டுளங் களித்திட நாளும்
பயிலுவர் ஆடல் பற்பல வன்றிப்
பாரொடு பாதலம் மாகம்
வியலுறு தேவர் தானவர் மாந்தர்
விரவிடத் தம்மிலே காட்டி
மயலது நீக்கித் தாம்பரம் ஆகும்
வகையவர் தேர்ந்திட வைப்பார் 27

945. கொற்றமார் குகனும் திருவருள் என்னாக்
குறித்திடுந் தாளினை மீதின்
உற்றிடுந் தண்டை கலீர்கலீர் என்ன
உயர்வரைச் சாரலில் வருவார்
சிற்பரன் உடனாய்ச் சிவையுமை மகிழச்
சிந்தியே புன்னகை உதிப்பார்
பற்றினார் பற்றாய்ப் பயில்தரும் ஐயன்
பரிசுதான் பகர்தரற் பாற்றோ 28

946. பண்டொரு பொழுதில் படைத்திடும் தொழிலைப்
பற்றொடு செய்திடு வேதன்
வண்டுழு வனசம் மீமிசை வதிவோன்
வந்துமுன் நிற்றலும் விசாகன்
கண்டுநீ யாரைக் கழறுதி யெனலும்
கர்வமீ தூரவே அவனும்
மண்டுமிவ் வுலகை ஆக்குவேன் பிரமன்
மறைபுகல் நாவினேன் என்றான் 29

947. அன்னது கேட்டங் கறுமுக வள்ளல்
அறைதியாற் பிரணவப் பொருளை
என்னவே மலரோன் திகைத்திடக் குகனும்
இருஞ்சிறை இட்டனன் இருந்து
முன்னுமப் பொருளை முக்கணான் வேண்ட
முறைமையாற் புகன்றான் முருகன்
நன்றுநீ விடுத்தி சிறையெனா வீசன்
நவின்றிட ஆங்கது செய்தான் 30

(வேறு அறுசீர் விருத்தம்)

948. நாரதர் என்று யாரும் நவில்தரு முனிசி ரேட்டர்
ஆரணம் அறைந்த வாறே அருமகம் இயற்ற வாங்கே
சீரணி குண்டத் துற்றே தீதுசெய் மேடந் தன்னை
ஏரணி கடம்ப னூர்ந்தே அடக்கினன் இன்னறீத்தான் 31

949. சந்தனத் தருக்கள் விஞ்சுந் தடவரைப் பொதியத்துற்ற
அந்தமில் தவத்து யர்ந்த அகத்தியன்விழைந்துவேண்டச்
செந்தமிழ்க் குரவ னாகி திருவடி சிரத்திற் சூட்டித்
தந்தனன் உபதே சந்தான் சண்முக வள்ளல்முன்னாள் 32

950. பாற்கடற் றுயில்செய் மாயன்
பங்கய விழியில் வந்த
கோற்றொடி அமிர்த வல்லி
குலவுசுந் தரிப்பேர் வல்லி
வேற்கரத் தோனை வேண்டி
வேட்டிடத் தவம்ப யின்றார்
கூற்றுகைத் தருள்வோன் மைந்தன்
கோதையர் முன்னே போந்தான் 33

951. ஏர்மலி இருவீ ருக்கும்
ஈந்தனம் வரமும் நீவிர்
சீர்மலி வானின் மண்ணிற்
சென்றுமே உறைதிர் யாமும்
நேர்பெற ஆங்கு வந்து
நிகழ்த்துவம் வதுவை யென்றான்
கார்முகில் வண்ணன் தந்த
கன்னியர் உவந்து சென்றார் 34

952. மாயை தன் புதல்வோ ராகி
வெந்துயர் அவுண ரானோர்
காயெரி யென்னாச் சீறி
கனன்றுபல் உலகு புக்கே
ஏயபல் லுயிர்க்கு மின்னல்
இயற்றியே நின்றார் அந்தோ
மாயனே மலரோன் போகி
மம்மருற் றுழந்தார் பன்னாள் 35

953. வானகம் பொலிவு குன்றி
வளனெலாம் இழந்த தாலோ
தேனக மாலை மார்பன்
சயந்தனும் சிறையுட் பட்டான்
மானிகர் சசியும் பின்பு
வைகினள் ஐயன் காப்பில்
ஏனவர் துன்ப மெல்லாம்
இயம்பலாம் தன்மைத் தன்றால் 36

954. வாசவன் விண்ணிழிந்து வறியனாய்க்
கைலைக் கேகி
ஈசனைப் பன்னாள் வேண்ட
இறைவரும் போந்தா ராக
நீசராம் அவுணர் வாட்ட
நெடிதுமே நொந்தேம் எந்தாய்
நேசனே நீலகண்டா சிறியருக்
கருளும் என்றான் 37

955. மட்டறாக் கொன்றை வேணி
மான்மழு ஏந்து மையர்
சிட்டநீ இரங்கல் வேண்டா
தேவரின் சிறையை வீட்டித்
துட்டராம் அவுணர் தம்மைத்
தொலைத்துமே வாகை வேய்ந்தே
இட்டமார் குமரன் ஏகும்
இரங்கலிர் என்னப் போனார் 38

956. மலைமகள் கேள்வன் விண்ட
மாண்புறு மொழியுட் கொள்ளா
உலைவுசெய் யிருளும் நீங்கி
எல்லிவந் துற்ற தொத்தார்
அலைவகல் பண்ண வர்தாம்
அரன்புகழ் பாடிப் போற்றி
இலைநுதி எஃகங் கொண்டோன்
இணையடி பரவ லானார் 39

597. கந்தவேள் வைகுங் கோயில்
கண்ணுதல் கடுகி மைந்த
இந்திரா தியராம் வானோர்
இன்னலுற் றிருந்தார் நீபோய்
வந்திடு தகுவர்த் தேய்த்து
வானவர்க் கருள்செய் என்றார்
எந்தையே அழகி தென்னா
இயம்பினன் குமர மூர்த்தி 40

958. ஆடினர் மகிழ்ந்து பாடி
அந்தரத் தேவ ரானோர்
ஓடினர் துள்ளித் தத்தம்
உவகையை உரைத்து நிற்பார்
நீடிய வெஞ்சு ரத்தில்
நின்றுபன் நாளு ழந்தோர்
கூடினர் நறுநீர்ப் பொய்கை
குளித்தனர் நேர நின்றார் 41

959. தேவரின் அவலந் தீர்க்கச்
செய்யவேற் குகனெ ழுந்தான்
பூவடி பெயர்த்துச் சென்றான்
சேய்ஞலூர் புக்க மர்ந்தான்
மேவரு பாடி பண்ணி விருப்புடன்
அமர்ந்த செவ்வேள்
ஏவரும் போற்றும் எண்டோள்
ஈசனை அருச்சித் தானே 42

960. அங்கிருந் தலைகொ ழிக்கும்
செந்திலை அணுகி மேலும்
பொங்கிடு பூத ரானோர்
புடைதனில் மருவப் போகி
துங்கமில் செயலே பூண்ட
சூர்க்கிளை தொலைப்ப எண்ணி
இங்குபல் அதர்க டந்தே
இலங்குநீர் இலங்கை புக்கான் 43

961. தேவருந் திகைக்க லுற்றார்
திசையுளார் கலங்கி நின்றார்
மேலவர் ஆர்ப்ப ரித்தார்
மிக்கபேர் அமர்வி ளைத்தார்
தாவடி நெடுவேல் ஐயன்
தாக்கியே எதிர்ம லைந்தான்
ஆவலில் வீர துர்க்கை
அறுமுகன் பக்கல் புக்காள் 44

962. சண்முக சிவனார் தாமும்
தாரக னோடு குன்றை
எண்ணுசீர்ச் சிங்கன் றன்னை
ஈண்டுதா னவரை யெல்லாம்
நண்ணியே கணத்தில் வாட்டி
நண்ணலன் ஆகி நின்ற
திண்ணிய தகுவர் கோனாஞ்
சூரொடும் அமர்ம லைந்தார் 45

963. ஆரலர் அறுவர் மாதர்
அருமுலைப் பால யின்றோன்
நேரலன் சூர பன்மன்
நிகழ்த்துநற் றவத்தை எண்ணி
ஏரலர் மஞ்ஞை யோடும்
இரும்பொறிச் சேவ லாக்கிச்
சீரிதின் ஊர்ந்துயர்த்திச்
செம்மையாம் பதமுந் தந்தான் 46

964. வாகையே சூடி நின்ற
வள்ளலை வானோர் வாழ்த்தி
ஓகையோ டேத்து கிற்பார்
ஒழிந்ததெம் இடர தென்பார்
பாகைநேர் மொழியார்
கௌரி பயந்தருள் செல்வர் என்பார்
தோகைமா மயில்மீ துற்ற
தோன்றலைப் பணிந்து சூழ்வார் 47

965. தானவர் ஆய பானாட்
கங்குலும் கடிதின் ஏக
வானவர் ஆனோர் போந்தார்
வந்துதம் வளந கர்க்கே
ஈனமா யினவ கன்றே
இந்திரன் மால்வி ரிஞ்சன்
சேனைநா யகனாய் நின்ற
சேந்தனைத் தொழுதெ ழுந்தார் 48

966. அண்ணலே அமிர்தே எங்கள்
ஆருயிர்த் தலைவா போற்றி
விண்ணவர் சிறைதடிந்த வேற்படை
வீரா போற்றி
பண்ணுபல் உயிரு மாகிப்
படைத்தவை புரப்பாய் போற்றி
கண்ணுதற் பெருமான் றந்த
கடவுளே போற்றி என்பார் 49

967. திண்ணிய புயமுந் நான்கும்
திகடரு முகங்க ளாறும்
நண்ணிய வரையி னோடு
நண்ணலர்ச் செற்ற வேலும்
புண்ணியச் சேவ லோடு
புகர்நிற மயிலுங் கொண்டே
கண்ணியும் கடம்புஞ் சூடும்
கடவுளே போற்றி என்பார் 50

968. பிரவண சொரூபன் நீயே
பேசுமா ரணமும் நீயே
அரனருள் சிறந்தே யோங்கும்
ஆகமம் அனைத்தும் நீயே
சிரமென நின்றி லங்கு
திருவெழுத் தாறும் நீயே
வரமலி கலைகள் நீயே
வள்ளலே குமரா போற்றி 51

969. இந்திரன் வாய்பு தைத்தே
எந்தைமுன் தாழ்ந்து நின்று
வந்தசூர்க் கிளைத டிந்தே
வானக வாழ்வு தந்தாய்
அந்தநற் செய்கைக் கீங்கண்
ஆற்றிடற் குதவி யில்லை
முந்திடு விருப்பொன் றுண்டால்
மொழிகுவம் நம்பி கேட்டி 52

970. முன்பயில் வதத்து தித்தாள்
மூவுல கத்து யர்ந்தாள்
அன்பொடு யாம்வ ளர்த்த
ஆரணங் காகுஞ் செல்வி
தன்பெயர் தேவ சேனை
தாங்கிடு மடமின் னாரை
இன்பொடு தேவி யாக
ஏற்றெமக் கருள்செய் என்றான் 53

971. துய்யவேற் பெருமான் றானும்
தூநகை உதிர்த்துச் சொல்வார்
நைகிலிர் அவளும் முன்னாள்
நந்தமை அடைதல் வேண்டிச்
செய்தனள் மாத வந்தான்
செப்பினேம் மணப்ப தாகத்
தையலை அங்கி தானும்
சாட்சியாய் வரிப்பம் என்றான் 54

972. ஆதியெங் குமரன் றானும்
அயனுமே எரியை யோம்ப
நீதிசேர் இல்லொ முக்கம்
நிலைபெறத் தெய்வ யானை
மாதினை மணந்து கொண்டான்
மகிழ்ந்தனர் விண்ணோர் எல்லாம்
தீதிலா துலகம் முற்றும்
திருவருள் மல்கிற் றம்மா 55

973. திருப்பரங் குன்ற மென்னுந்
தெய்வத வரையின் கண்ணே
விருப்புறு தெய்வ யானை
வியந்திடச் சின்னாள் வைகி
மருப்பொலி நீபத் தாரோன்
மாகமே வழியாய்ச் சென்று
உருப்பொலி கந்த வெற்பில்
உற்றிருந் தருளி னானே 56

974. பத்தியில் மிக்க சீரோன்
பராபரன் அருளும் பெற்றோன்
திக்கொடு ககனம் பூமி
சென்றுமீள் செய்கை யாளன்
அக்கணி அண்ணல் தந்த
அறுமுகற் றொழுவான் உன்னி
புக்கனன் கயிலைப் பாங்கர்ப்
பொன்னெடுங் கோயில் உள்ளே 57

(வேறு கலிநிலைத்துறை)

975. நீடும் இணைவிழி நின்றிழி நீரது யாறாகி
ஓடும் பரிசினன் ஒகையு முந்துற உற்றயலே
வீடும் தருமுரு கேசனின் றாண்மிசை வீழ்ந்தேத்திக்
கூடும் மகிழ்வொடு கூறினன் முந்தையொர்செய்தியதே

976. மாலின் மகளென வந்திடு சுந்தர வல்லியவர்
சாலுந் தவமது செய்வுழிச் சண்முகர் அங்கேகிப்
பாலின் மொழியினை பூமிசை வருகெனப் பன்னியதும்
ஏலும் வகையினில் சாற்றினர் நாரதர்எந்தைக்கே 59

977. ஈசன் முருகனும் முந்தைய எண்ணமும் எய்துதலால்
பேசுங் குறவரின் இல்லினின் வாழ்தரு பேதைதனை
வீசும் புகழுறு தண்டமிழ் வித்தகர் வேண்டுநெறி
ஆசில் கடிமனம் ஆற்றிட முன்னினன் ஆகைகொடே

978. குன்றம் உருவிட வெவ்வயில்
தொட்டருள் கொற்றவனார்
அன்றவ் வள்ளியும் அன்பொடு
செய்திடு தவவலியால்
நன்றும் பெருமகிழ் வுற்றுமே
லீலைகள் தனியாற்றி
மன்றல் மணமது கண்டுமே
மன்னினர் இன்பொடே 61

979. நாடுந் தவமது செய்திடு நாயகி வள்ளியவர்
ஈடில் குகபர ஏந்தலின் இன்னருள் நோக்கானே
வாடுந் தகைமலி மானிட காயமும் மாறித்தான்
தேடும் ஒளிசெறி தெய்வத யாக்கையும் எய்தினரே 62

(வேறு அறுசீர் விருத்தம்)

980. உருத்தெழு பவநோய் மாற்றும்
ஒளிதிகழ் சுடர்வேல் எந்தை
செருத்தணி உளத்த னாகி
திருத்தணி சேர்ந்து பின்னும்
அருத்திசேர் வள்ளி யின்னாம்
அன்னையை அழைத்துக் கொண்டு
கருத்துடன் கயிலைப் பாங்கர்
கந்தவெற் பதனைச் சார்ந்தார் 63

981. கந்தவெற் பதனின் மாட்டு கடவுளா லயத்தே மேவி
வந்துயர் தெய்வ மாதும் வனசரர் தந்த மாதும்
முந்தியே புடையி லங்க மூவிரு முகத்து வள்ளல்
அந்தமில் தனிவேல் தாங்கி அரியணை மீதிருந்தான் 64

(தரவுக் கொச்சகம்)

982. மிக்குயர்ந்த விறல்மொய்ம்பன்
விரவியெழு குறளர்தாம்
புக்குநின்று பணிபுரியப்
புருகூதன் அயன்மாலும்
பக்கலெலாம் பரவிநிற்பப்
பலவாயின் ஒியமுழங்கச்
செக்கருறு திருமேனிச்
செவ்வேளும் அருள்புரிவான் 65

(அறுசீர் விருத்தம்)

983. பழகுபைந் தமிழிற் கொண்ட
பற்றினாற் பஃறை நாளில்
வழுதியுக் கிரப்பேர் தாங்கி
வந்துமே மதுரை மூதூர்
தொழுதகு முடியும் சூடி
தூமலர் வேம்ப ணிந்து
குழகனாம் குமர வேளும்
கொற்றவ னாகிநின்றான் 66

984. மாதவம் புரிந்த காலை
வருநிறை தளர்ந்தா ராக
பூதனார் வெகுண்டாங் கெய்தி
புடைத்துண எழுந்த போழ்தில்
ஆதரஞ் சேர்நக் கீரர்
அருந்தமிழ் கொண்டழைப்ப
காதலிற் புக்கான் காத்தான்
கந்தவேள் எந்தை தானே 67

985. உமையவள் பொருட்டாய் முன்னாள்
ஊமனாய்ச் சாப மேற்றே
இமையவர் புரியா மென்னா
இலங்குசீர் உப்பூர் வைகிக்
கமையுறும் உருத்ர சன்ம
காரணீ கன்னாய்ச் செவ்வேள்
அமைதரு களவி யற்காம்
அருமுரை தெரித்து வைத்தான் 68

986. விரிபுகழ் மதுரை மூதூர்
மேவிடு தமிழ்ச்சங் கத்தில்
திரிபுரம் வேவச் செற்ற
செஞ்சடைக் கடவு ளோடும்
தெரிதமிழ்ப் புலவர் கூடக்
குமரவேள் சேர்ந்த மர்ந்து
அரிதுணர் மொழியா ராய்ந்தே
அருஞ்சுவை துய்த்தா னங்கே 69

987. அன்னையாம் ஔவை தன்முன்
அதரிடை வந்து தோன்றி
இன்சுவை நாவல் நல்கி
எழுதருந் தருக்க கற்றி
முன்புவை வேலோ னாகி
முதிர்சுவைப் பாடல் கொண்டு
தன்னருள் வழங்கி வைத்தான்
தமிழவேள் முருகன் றானே 70

988. செஞ்சொலான் நன்றி மிக்கோன்
சினக்கற் குடல மீந்தோன்
அஞ்சொலான் முட்டை என்னா
அமைத்துமே பாடல் செய்தோன்
வஞ்சமில் புலவன் பொய்யா
மொழியெனும் வாய்மை யாளன்
தஞ்சமென் றேத்தப் போந்து
தலையளி செய்தான் வேலோன் 71

989. சந்தவின் இசையி னாலே
தமதடி பரவி யேத்தும்
எந்தையாம் அருணை நாதர்
இங்கெழுந் தருள்க வெண்ண
முந்துமா மன்னன் காண
வளரொளி கான்று செவ்வேள்
வந்துமே அதல சேடன்
வருந்தமர் நடமும் செய்தான் 72

990. திருத்தரு காஞ்சி யின்கண்
திகடரு குமர கோட்டத்
தருச்சகர்க் கடம்பூண் டேத்தும்
அண்ணலார் கச்சியப்பர்
அருத்தியிற் புனைந்த பாவுக்
கிலக்கணம் காட்டச் சேயோன்
உருத்தெழு வடிவேல் நீத்தே
ஒருபுல வோனாய் வந்தான் 73

991. சிற்பரன் சுப்ர மண்யன்
செந்தமிழ்க் காத லாலே
நற்றமிழ் மலர்தொ டுத்து
நறுவிரைத் தெரியல் சாத்தும்
பொற்புறு பால னாகப்
புகல்குமர குருப ரற்கும்
அற்புத நீர்மை என்றே
அறைதர அருளும் செய்தான் 74

992\. முந்தையோர் வைகல் தன்னில்
முத்தமிழ்ப் பகழிக் கூத்தர்
தந்திடு பிள்ளைப் பாட்டின்
தகவினை எண்ணி அன்னோன்
நொந்திட வருத்து நோயை
நொடிதனில் அகற்றி மார்பில்
கொந்தவி மாலை சூட்டிக்
குமரனல் அளியுஞ் செய்தான் 75

993\. பைந்தமிழ் வேட்கை கொண்டு
பன்னிரு தடந்தோள் வள்ளல்
கந்தரப் புலவோர்க் கெல்லாம்
துணையென மன்னி நாளும்
முந்திடு துயர கற்றி
முச்சியிற் பதமும் வைத்தே
சந்தநம் அருளே தந்து
தரணியோர் பரவ நின்றான் 76

994\. திருப்பரங் குன்றம் மேய
திருமுரு கம்மை யுந்தான்
விருப்பொடு நாம மந்ரம்
நவிற்றிடு வேட்கை உள்ளார்
உருத்தெழு வினையாற் கொண்டோன்
உயர்கரம் துணித்த காலை
திருப்பெரு கருளுமீந்தே செய்யவாழ்
வளித்தான் செவ்வேள் 77

995\. பேரருள் வள்ள லாகிப்
பிறங்கிடு குமர னெந்தை
வாரண மடமின் மேவை
வள்ளிநா யகியார் கூட
ஏரணி நெடுவேல் தாங்கி
இரும்பொறி மஞ்ஞை ஊர்ந்து
பாவினர்க் கருள எண்ணிப்
பல்பதி அமர்ந்தான் வாழி 78

(வேறு தரவுக் கொச்சகம்)

996. சீர்மலியும் மாடங்கள்
சிறந்தோங்கு கூடலதில்
ஏர்மலியும் இலிங்கமென
இலங்குபரங் குன்றதனில்
தார்துலங்கச் சண்முகனுங்
குஞ்சரியாந் தையலொடும்
பேர்பரவி இரக்குநர்க்குப்
பெருகருளும் புரிகின்றான் 79

997. தெள்ளுதிரை கொழித்துலவுந்
திருச்செந்திச் சிவகுமரன்
கொள்ளுமலர் அக்குடனாய்க்
கூடபய வரதமுடன்
கள்ளமில்சீர் குழந்தையெனக்
கவினொழுக அமர்ந்தருளி
உள்ளுமுயர் பூசைசெய்தே
உலகுயிரை ஓம்புகிறான் 80

998. முன்பொருகால் மாங்கனிக்காய்
மூவுலகை வலம்வரீஇ
துன்பகலக் கயிலையினைத்
துறந்தேகிப் பழநியெய்தி
அன்புநிறை பழநீயென்
றனையாரும் அடுத்தணைப்ப
இன்புதவித் தண்டேந்தி
எனைத்துலகும் புரக்கின்றான் 81

999 காவிரியின் வடகரையில்
கவினாருந் திருப்பதியாம்
பூவிரிநல் லேரகத்தில்
பொருந்தியுறை குருமணியாய்த்
தூவிரிசெஞ் சடைப்பரமன்
கேட்டிடவே உபதேசம்
தாவகலச் செய்தகுகன்
தரணியெலாங் காக்கின்றான் 82

1000. குன்றவரின் குலக்கொடியைக்
குலவுமெழிற் குமரிதனை
அன்றெவரும் அறியாதே
அருளாடல் செய்தணைத்தோன்
மன்றாடி தருமதலை
மயிலூரும் பெருமானார்
குன்றுதொறும் நின்றாடிக்
குவலயத்தை ஓம்புகிறான் 83

1001. பச்சிலையும் நறுமலரும்
பரப்பியுயர் மலையாடி
மெச்சவரு விரைகமழ்ந்து
மேவுபழ முதிர்சோலை
நச்சிமகிழ்ந் தாடல்புரி
நம்பனருள் குமரேசன்
இச்சகத்தோர் மகிழ்ந்தேத்த
இன்பநலம் தருகின்றான் 84

1002. விரைந்திழியும் அருவிபயில்
வேங்கடமாம் வியன்கிரியில்
இரைந்திழியும் கங்கையினை
இருஞ்சடைகொள் சிவன்புதல்வன்
அரந்தைகெட வேல்தாங்கி
அணிகுலவக் கடம்பணிந்து
பரந்துபணிந் தெழுமடியார்
• பவவினைகள் அகற்றுகிறான் 85

1003. தெய்வவரை என்றெவரும்
தெரிக்கவுயர் தணிகைதனில்
தையலிடங் கொண்டசிவன்
தமருகமும் மழுவுமுடை
ஐயனருள் அறுமுகனும்
அன்னையரோ டமர்ந்தருளி
மெய்யன்பிற் கட்டுண்டு
விரும்புவரம் தருகின்றான் 86

1004\. குழலொலித்து யாழிசைத்து
குன்றவர்கள் கரம்பற்றி
விழவெடுக்கும் வள்ளிமலை
விரும்பிவந்து மதிசூடும்
அழகனருள் திருமதலை
அரிவைவள்ளி யுடனாடிப்
பழககற்றிப் பற்றினர்தம்
பற்றாகி உதவுகிறான் 87

1005\. அல்லணியுப் மிடற்றோனை
அருத்தியுடன் உமையவளார்
மல்லின்மா பரநீழல்
வழிபட்ட அருட்காஞ்சி
செல்வவடி வேலவனார்
தெரிவையரோ டமர்ந்தருளி
தொல்லைவினை அகற்றிநன்றும்
துணையாக மேவுகிறான் 88

1006\. விராலிமலை சிராப்பள்ளி
யெலூரே செங்கோடு
குராவலருந் திருவருணை
கொடுங்குன்று மாமதுரை
பராவுகுன்றக் குடியுடனே
பலப்பலவாம் பதியமர்ந்து
தராதலத்தே அறுமுகனும்
தாழாதே அருளுகிறான் 89

1007\. எருதுகைக்குஞ் சிவபரனார்
எழின்மதலை திருக்கோயில்
திருவேறு பாரதத்தே
திகடருமால் அனந்தங்காண்
பெருகார்வத் தொடுமிறைஞ்சித்
தொழுவார்க்குப் பெரிதுற்றே
ஒருவாத இன்பநலம்
உற்றுயர்ந்தோர் எண்ணிலரால் 90

1008. ஆறுமுகம் படைத்துடையான்
அடியரெலாங் குழீநின்று
நீறணிந்து நியமமொடும்
பராவெடுப்ப நினைவிருந்து
பேறருளும் பொருட்டாக
ஈழத்தும் பெயர்ந்தமர்ந்தான்
வீறருளும் திருப்பதிகள்
பலவீங்கு விளங்கிடுமால் 91

1009. அதிரவரு மாணிக்க
கங்கைதனிற் குடைந்தாடி
மூதிருமன்பின் விழிகலுழ
முகையவிழ இதயமது
கதிரமலைக் குருமணியே
குகபரனே காத்தியெனத்
துதிபாடிப் பணிந்தெழவே
துணையாகி வந்து நிற்பான் 92

1010 திரைபெருக்கி மணல்குமித்துத்
திகழ்தொண்டை மானாற்றின்
கரைதனிலே விளங்குசெல்வச்
சந்நிதியிற் கடலாடி
வரைபயிலும் குறமின்னும்
குஞ்சரியும் புடைமருவ
அரையவெமைப் புரத்தியென
அருத்தியுடன் முன்புகுவான் 93

1011. திங்கள்கோட நிவந்தோங்கித்
தெரிமாட வியன்நல்லை
துங்கமலி நறும்புனலிற்
றோய்ந்தாடி உட்புகுந்தே
சங்கரனார் தருசுதனே
தமிழ்முருகா சுடர்வேலா
இங்குனெமைக் கடைக்கணியாய்
எனத்தொழவே இரங்கிநிற்பான் 94

1012. துரகமுக மதைமாற்றித்
துன்னுமிசை வளர்த்துலகர்
பரவவரு மாவைதனில்
பன்னிருகை கொண்டள்ளி
வரமருளும் தேசிகனே
வண்ணமயில் வாகனனே
இரவலர்யாம் நொந்தெய்த்தேம்
இரங்கிடென அகத்துறுவான் 95

(வேறு அறுசீர் விருத்தம்)

1013. அருளென்னும் ஆரமிர்தை ஆறுமுகன்
உயிர்க்குலத்துக் கள்ளி வீசி
வருமனத்து இருளிரித்து இன்பவொளி
வழங்கிவைத்து ஞானம் நல்கி
திருமலிநற் றெய்வமெனத் திசையெல்லாம்
பரவிடவே வாழ்வு தந்து
பெருகுதளி அனைத்தினுமே பிரியமுடன்
நின்றருளிப் புரக்கின் றானே 96

1014. தேவரரே முனிவரரே திசைக்குரிய
காவலர்கள் மாக வாணர்
மூவருமே தேர்வரிய முழுமுதலாம்
முருகனவன் முன்போர் வைகல்
ஏவருமே வியப்பெய்தி இணையடிகள்
காண்கிலராய் ஏங்கி நிற்ப
மாவடுநேர் வரிவிழியார் இருவரொடும்
வான்வழியே வந்து நின்றான் 97

1015. சுருத்தகலாக் காதலனாய்ச் சிவப்பணியை
நிதம்புரியும் கரும யோகி
பொருத்தமுறும் மருத்துவநூல் மெய்ந்நூல்கள்
புகழ்நூல்கள் தேர்ந்த மேலோன்
அருத்திகொடு தனைநிதமும் உபாசிக்கும்
அண்ணலப்பா முதலி தானும்
திருத்தமுடன் எடுத்ததளி அமர்ந்தருள
திருவுள்ளம் வைக்கலானான் 98

1016. ஈராறு தோளுடையோன் முருகேசன்
ஏந்திழையார் புடையின் மேவ
சீராரும் திருநெடுவேல் கரத்திருந்து
சுடரொளியைச் சிந்தி நிற்ப
ஏராரும் மணிமயிலில் இவரந்திழிந்து
இருங்கழல்கள் ஒலியெழுப்ப
நீராரும் பண்ணைசெறி வட்டூரை
நினைந்தெண்ணி வந்துற் றானே 99

1017. வந்துற்ற திருமுருகன் வட்டூரில்
வான்தளியுட் புக்கு நின்று
தந்திமுக முன்னவனை தரிசித்தே
அன்பொடவன் றன்னை ஏத்தி
முந்தியசீர் விசுவேச முக்கணனை
முன்புகுந்து பணிந்தெழுந்து
சுந்தரியாம் விசாலையையும் துதித்தேகி
இன்பினொடும் குடபால் வந்தான் 10

1018. வந்தகுகன் சிற்பியர்தாம் தமக்கென்ன
வகுத்தமைத்த கோட்டம் கண்டான்
தந்திடுசீர் விமானதளம் முற்றுநிலை
தானடைந்த செய்தி ஓர்ந்தான்
நந்திநிற்கும் கற்சுற்று வெண்சிலையில்
நளினபதச் சுவடு சாத்தி
அந்தமில்சீர் அருளாடல் ஆற்றிநின்றான்
அதனுண்மை அறிவார் யாரே 101

1019 எல்லிவர கற்றச்சர் ஆங்குபுக்கார்
எழில்முருகன் குழந்தைவேலன்
அல்லியுறு கமலபதச் சுவடதனை
அருத்தியுடன் நோக்கி நின்றார்
சொல்லிவலத் தோள்துடிப்பத் துணைக்கரங்கள்
சிரத்திருத்தித் தொழுதெழுந்தார்
நல்லசுப செய்தியது நடந்தோடி
இதயமடு நிறைத்த தம்மா 102

1020. நாடுபுகழ் சிற்பியர்கள் நனிமுயன்று
தாமமைத்த தனியின் மாட்டே
ஏடுமலி நீபமலர் மாலைசூடும்
எந்தைபத சுவடு தானும்
கூடுவகைச் சிலையதனைக் குவலயத்தோர்
ஏவருமே தொழுதே உய்ய
ஊடுவெளி விடுத்தினிதே உறப்பதித்தார்
உண்மைகண்டு தொழுதேம் வாரீர் 103

(வேறு: அறுசீர் விருத்தம்)

1021 சண்முக வள்ளல் தானும்
தகைசெறி கொள்ளோ லைக்கண்
அண்ணலார் அப்பா கொண்ட
அன்பினில் கட்டுண் டாராய்
நண்ணியே அருள்கர ந்து
நாயகி மார்க ளோடும்
விண்ணவர் விழைந்து போற்ற
வீற்றிருந் தருளுகின் றார் 104

1022. சுந்தரம் மேவி நின்ற
சுப்பிர மணிய னார்க்கு
வந்ததாம் தாமி ரத்தில்
வடிவுறும் சுமைக்க வெண்ணி
நந்துசீர்த் தபதி தன்னை
நாடியே யொழுங்கு பண்ணி
எந்தையாம் அப்பா வுந்தான்
ஏகினர் இவ்வி னுக்கே 105

1023. மற்றுமோர் தனித னக்காய்
மாவேற் சுப்பிர மண்யர்
உற்றருள் சிலையும் வேண்டி
ஒழுங்குமுன் னொருவர் செய்தார்
கற்றறி தபதி யாரும்
கருத்துடன் ஆக்கித் தானே
நற்றிறம் தாய ரோடே
நண்ணிய அவர்க்கும் ஈந்தார் 106

1024. குஞ்சரி வள்ளி யோடு
கூடுமச் சிலையைக் கொண்டோன்
விஞ்சிடும் இச்சை முந்த
விதிப்படி நிறுவ வெண்ணி
எஞ்சிடான் முயன்றும் அஃதே
இயைந்திடா இருப்ப ஏங்கி
தஞ்சநீ யென்று மீட்டும்
தந்தனன் தபதி மாட்டே 107

1025. கோணமா மலையி லுள்ளார்
குலவுசீர் அன்பர் சில்லோர்
வேணவா மிக்குப் போந்தே
வேலவர் எம்பால் உள்ளார்
மானலம் உடையோய் கேண்மோ
வள்ளிதெய் வானை வேண்டும்
நீணிதி கருதும் தாழா
தென்னலே தருதி யென்றார் 108

1026. அன்னது கேட்ட சிற்பி
அன்னையர் தம்மைத் தந்தார்
முன்னவர் அப்பா கொண்ட
முனிவினைச் சாந்தி செய்ய
மன்னிய சுப்பிர மண்ய வான்சிலை
யவர்க்கும் ஈந்தான்
பின்வரும் விளைவை யோரார்
பேதைமா னிடர்கள் அந்தோ 109

1027. மாணலங் கொண்டு கோணா
மலையினர் தம்மூ ரின்பால்
தாணுவின் விழியில் வந்த
சண்முக சுவாமி யோடு
பூணெழில் அன்னை மாரைப்
புணர்த்தியே நிறுவ வீழ்ந்து
காணவே யொடிந்த தம்மா
கந்தவேள் படிமம் தானே 110

1028. இற்றவப் படிமந் தன்னை
எடுத்துமே கோணை யூரார்
மற்றினி இவற்றை யாமும்
மறித்துமே புதிது செய்வேம்
குற்றமெங் குளதோ தேரேங்
கொற்றவை வேலோன் எம்மை
நற்றிறம் வருத்து கின்றான்
நன்றுநன் றென்ற மைந்தார் 111

1029. மீண்டுமே நவம தாக
வேலவர் தம்மி னோடும்
காண்டகும் அன்னை மாரைக்
கடிதினில் இயற்ற லானார்
ஏண்டகும் அப்பா பாலே
எய்தியே தபதி தானும்
மீண்டவவ் அன்னை மாரை
விரைவினில் அளித்தான் என்னே 112

1030. வந்துயர் தாமி ரத்தில்
வடித்திடு சிலைக டம்மை
முந்துசீர் கொள்ளோ லைக்கண்
உற்சவ மூர்த்தி யாராய்
தந்துமே பிரகா ரத்தில்
தகைமைசால் கோட்டம் தன்னில்
கந்தனைத் தாய ரோடும்
சிலைதனில் காண வெண்ணி 113

1031. கணிகளைக் கண்டு அப்பா
கவினுறு முகூர்த்தம் தேர்ந்து
பிணிகெட வருளும் பெம்மான்
பிறங்குசீர் அருளை வாழ்த்தி
பணிவுடன் ஊர்க்கு ரைத்துப்
பரிசனர் கூடிப் போத
அணிமிகும் அலங்கா ரங்கள்
ஆற்றுவித் தாரே ஐயன் 114

1032. வலமலி அப்பா வுந்தான்
வான்புகழ் பெருக்கி வைகி
தலமிசை அருளை நல்கும்
சண்முக சுப்ர மண்யன்
மலரடி உடாசித் தேத்தும்
வகையுடன் அமையா ராகி
நலமலி கதிர் காமம்
நண்ணிமீள் திறமுங் கொண்டார் 115

1033. அந்தநன் னியமத் தானே
அருநடை வழிமேற் கொண்டு
கந்தனைக் கதிரை தன்னில்
காணுவான் சென்ற வேளை
அந்தணச் சிறுவன் என்ன
அறுமுகன் அருத்தி யோடும்
வந்துமா ணிக்க கங்கை
மருங்கினிற் றரித்து நின்றான் 116

1034. அருத்தியோ டழைத்து
வேலோன் அன்பனே முன்நீ கேட்ட
திருத்தகும் எந்திர மிட்ட
தகடுநீ கொள்ளென் றீந்தே
ஒருத்தரும் அறியா வண்ணம்
உற்றுமே மறைந்தான் வாழி
மருத்துவ மகிபர் அப்பா
மகிழ்ந்துமே பெற்றுக் கொண்டார் 117

1035. அந்தநற் றகடு தன்னை
அளவிலா அன்பி னோடு
மந்திர மணியே மற்றும்
மருவுமௌ டதங்கள் வல்லோன்
தந்துதம் இல்லிற் காத்து
தருவழி பாடி யற்றி
சந்ததம் இன்பம் துய்த்தே
தகவுமேற் பட்டு நின்றார் 118

1036. ஆண்டுமே பகை டந்து
அண்ணலார் முருக வேட்கும்
ஈண்டுசேர்ப் பிரதிட் டைதான்
இயற்றிடும் இற்றை நாளில்
ஏண்டகும் உளத்த ராகி
எய்துமத் தகடு தன்னை
ஆண்டசீர் சுப்ர மண்யன்
அடித்தலத் துள்ளவைப் பித்தார் 119

1037. மந்திர விதியி னோடு
மருவுசீர்க் கிரியை யாற்றி
எந்தையாங் கந்த வேளை
இனிதமர்ந் தருளப் பண்ணி
வந்தசீர் விழவு மாற்றி
மாறிலா அருளே துய்த்தார்
நந்துநல் இன்பந் தானும்
நாடெலாம் நிலவு மாலோ 120

1038. ஐயனெங் குருசு வாமி
அறுமுகன் அடிகள் வாழி
மைவிழிக் குறமின் னோடு
வாரண மங்கை வாழி
வெய்யசூர்த் திறம கற்றும்
வேற்படை தானும் வாழி
செய்யபொற் சேவல் மஞ்ஞை
திருவருட் குழாமும் வாழி 121

1039. நீலமா மயிலில் ஏறும்
நின்மலன் அருளி னாலே
சாலவே குமரன் செவ்வேள்
சண்முகன் சுப்ர மண்யன்
சோலையார் வட்டூர் வந்த
சருக்கமும் சொற்றேம் மேலும்
கோலமார் கூத்தப் பெம்மான்
சருக்கமும் கூறி யிற்பாம் 122

சுப்பிரமணிய சுவாமி சருக்கம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 1039



சிவகாமசுந்தரி சமேத நடராசப்பெருமான்

உ
சிவமயம்
அருள்புரி காண்டம் நான்காவது

## கூத்தப்பிரான் சருக்கம்

(தரவுக் கொச்சகம்)

1040. கண்ணுதலான் வெண்ணீற்றான்
கடுக்கைபுனை மௌலியினான்
பெண்ணணியலாள் விசாலையுடன்
பிறங்குபுகழ் விசுவேசன்
வண்ணவயல் வட்டூரான்
வரையாஇன் னருள்கூட்டத்
தண்ணளியார் அருட்கூத்தன்
சருக்கமதைச் சாற்றிடுகேன் 1

1041. கங்கையொடு மதிபுனைந்து
கனகமணி மன்றினிலே
மங்கைசிவ காமியவர்
வளர்தூக்குச் சீர்பாணி
அங்கிசைப்பத் துடியார்ப்ப
அநவரத நடமியற்றும்
துங்கமலி திருக்கூத்தன்
தூக்கியசீர்ப் பதந்தொழுவாம் 2

1042. உருத்தெரியாக் காலமுதல்
உட்கலந்தென் உளத்தமர்ந்து
வருத்துபவ நோயகற்றி
வளர்ஞானத் தமுதருத்தி
அருட்கடைக்கண் சாத்தியென
தலக்கணவை துடைத்துநிதம்
திருத்தமுற வளர்த்தெடுத்த
சிவகாமி தாடொழுவாம் 3

1043. எம்பெருமான் இருஞ்சடையான்
எருதேறி உமைபங்கன்
அம்பரத்தார் பாதலத்தார்
அவனியுளார்க் கருள்புரிந்து

வெம்பவநோய் அகற்றியவர்
விரும்புவரம் உதவச்சிற்
றம்பலத்தே சபாபதியாய்
அருளாட்சி புரிகின்றான் 4

1044. நீடுவள மிகுந்தொளிரும்
நிலவுலகோர் பெண்கொடிகாண்
பீடுபெறும் அவ்வணங்கின்
பிறங்குமெழில் அவயவங்கள்
ஈடிலவாந் திருப்பதிகள்
இவற்றுளெலாம் இதயமெனச்
சேடுமிகு சிதம்பரமும்
திகழ்த்தருங்காண் செப்புங்கால் 5

1045. உடலகத்தில் இதயமன்றில்
உயிர்முதல்வன் ஒலியெழுப்பித்
திடமுடனாய் நடமியற்றிச்
செயலனைத்து மூக்குகிறான்
படவரவு சுமக்குமிந்தப்
படிமிசையே சிதம்பரத்தும்
அடல்விடையோன் அநவரதம்
ஆடலது புரிகின்றான் 6

1046. செப்புதல விருட்சமதன்
திறமதனால் தில்லையென்றும்
அப்பெரியோன் புலிமுனிவன்
அமர்ந்துறையும் தகவதனால்
ஒப்பிலதாம் புலியூராய்
உரைத்திடவும் நிலவிடுமால்
திப்பியஞ்சேர் சிதாகாசச்
சிதம்பரமும் செகமீதில் 7

1047. பூவுலகிற் சிவபதிகள்
பொருந்தியுள பலவெனினும்
நாவலர்கள் பாவலர்கள்
நற்கலைஞர் ஒருமனதாய்க்

கோயிலென இத்தலத்தைக்
குறித்திடுவர் அதுகொண்டே
ஓவறுசீர்ச் சிதம்பரத்தின்
உயர்வனைத்துந் தேர்ந்திடலாம் 8

1048. சிதம்பரத்தின் திருப்பெயர்கள்
சிலபின்னும் உளவவற்றுள்
இதம்பயிலும் வியாக்ரபுரம்
இயம்பு பற்றைப் பெரும்புலியூர்
பதந்தருநற் புண்டரிக
புரத்தினொடும் பண்ணவர்கள்
நிதம்பயிலும் பூலோக
கயிலையுமாய் நிகழ்த்துவரே 9

1049 ஆறணிந்து மதிமிலைச்சி அதளுடுத்தி அரவார்த்துக்
கூறுதரு துடியேந்திக் குலவபய வரதமொடும்
வீறுதரும் அங்கியுடன் முயலகனை மிதித்தூன்றி
பேறுதரும் அடிதூக்கிப் பிஞ்ஞகனும் ஆடுவனே 10

1050. செய்யதிரு மேனியனாய்த்
திகழ்புருவந் தனைக்கோட்டித்
துய்யகுமிண் ணகையுதிர்த்துத்
தொங்குதிருச் சடைதாழ
நையுமிடைச் சிவகாமி
நயனமிசை பனிதுளிர்ப்ப
ஐயனவன் ஐந்தொழிலும்
ஆற்றிடுவான் ஆடுகிறான் 11

1051. ஆணவத்தின் அரவணைப்பில்
அயர்ந்துறங்கும் உயிர்குலத்தை
மாணுறவே தோற்றுவிப்பான்
மாபரனும் மதித்துன்னி
ஏணுறவே குடிலைநின்றும்
எழுப்புவனே நாதமதைத்
தாணுதரு உடுக்கையொலி
சிருட்டிதனைத் தந்திடுமே 12

1052\. அரவதனை இடைவீக்கி
அணிகூட்டி முப்புரிநூல்
உரமதனிற் கிடந்தொளிர
உம்பருளார் உளங்களிப்ப
இரவதனில் நடமியற்றும்
எம்பெருமான் அபயகரம்
மரபுமலி திதியதனை
வழுவாமே புரிதருமே 13

1053\. கரியாகக் காமனைமுன்
காய்ந்துவைத்துக் குமரனையும்
தரியாதே தந்தருளித்
தானவர்கள் புரமூன்றை
எரியாடி இறுதிசெய்த
எம்பெருமான் இடக்கரத்தே
விரியுமங்கி சங்கார
விழுத்தொழிலும் இயற்றிடுமே 14

1054\. வன்புலித்தோல் அணிந்தபரன்
மறைப்பாற்றல் வெளிப்போந்து
புன்செயலார் சகசமல
வலிதொலைத்துப் போக்கிடுமால்
என்பணிவோன் முயலகனை
இரிந்துகெட ஊன்றுகிறான்
பின்னதனைத் திரோபவமாய்ப்
பேசிடுமே மறைகளெலாம் 15

1055\. மஞ்சுசெறி தருக்குலங்கள்
வளர்ந்தோங்கும் உலகுயிர்கள்
எஞ்சலிலா இன்பநலம்
எய்திநனி துய்த்திடவே
விஞ்சுமருட் கொடைநல்கு
விரிசடையோன் தூக்கியதாங்
குஞ்சிதசீர்ச் சரணமது
குறித்திடுமே அநுக்கிரகம் 16

1056. சிற்றறிவில் சிறுசெயலில்
சென்றணைந்து தோயாமல்
கொற்றவநீ தஞ்சமெனாக்
குழைந்தடியில் விழுமதியை
அற்றமறிந் தேயுதவி
அணிசடையில் இருத்துபிரான்
நற்றிறங்கள் அறிந்துணர்ந்து
நண்ணிவழி படனன்கே 17

1057. தேக்குமருள் இறைசெயலே
எவையுமெனத் தெளிந்தனராய்
நீக்கரிய சிவப்பணியை
நிகழ்த்துமன்பர் தமையெல்லாந்
தூக்குதிரு வடிவிரலால்
துண்ணெணவே எடுத்தருளி
வீக்குசடை முடியிடத்தே
விமலனுந்தான் இருத்துவனே 18

1058. ஆக்கியளித் துலகதனை
நீக்கிமறைத் தருள்புரியும்
மாக்கருணை வள்ளலவர்
மந்திரநல் வடிவதுவாய்
வீக்குபுகழ்த் தூலமொடு
சூக்குமமாய் விரிந்திலங்கிக்
காக்குமுயர் ஐந்தெழுத்தைக்
கட்டுரைப்பர் கற்றுணர்ந்தோர் 19

1059. நம்பனருள் நாமமெனும்
நமசிவய முறையானே
அம்புயநேர் சீரடியாய்
அழகொளிருந் திருவயிறாய்ப்
பம்புதிருத் தோளதுவாய்ப்
பரவுமெழில் வதனமதாய்
உம்பருயர் திருமுடியாய்
உளதாமென் றுரைக்குவரே 20

1060. அம்பலவன் நாமமெனும்
சிவயநம நிரனிறையே
நம்புதுடிக் கரத்துடனாய்
நவில்திசைக்கண் வீசுகரம்
இம்பர்மிசை அமைந்தகரம்
எண்ணுமங்கி தரித்தகரம்
சம்புவவன் ஊன்றுமடி
தானுமெனா வியம்புவரே 21

1061. கற்பனைக்குள் அடங்காத
கருணைமலி திருக்கூத்தன்
பற்றுடனே சரண்புகுந்த
பக்குவர்க்கும் அபக்குவர்க்கும்
பொற்புறுசீர் ஞானநடம்
பொருந்திவரும் ஊனநடம்
அற்புதமாய் இயற்றுகிறான்
அவன்பெருமை அறைவாரார் 22

(வேறு கலிநிலைத்துறை)

1062. ஓதுந் தமனியந் தில்லையுள்
ரத்தினம் ஆலவனம்
நீதில் மதுரையில் வெள்ளியே
தாமிரம் நெல்லையினில்
காதல் இயைதரு சித்திர
மன்றது குற்றாலம்
நாதன் நடநவில் நற்பொது
விடமென நாட்டுவரே 23

1063. நீடும் அணிசடை எங்கணு
மேவியே நின்றதிர
நாடும் பறையுடன் தட்டையும்
மொந்தையும் நண்ணிடவும்
கூடும் புலிமுனி பணியிறை
கும்பிடக் கொட்புடனே
ஆடும் அணிபொனின் மன்றிடம்
அம்பல வாணனுமே 24

1064. திண்டோ ணிரையரை சென்றினி
தெங்கணும் போதரவே
கொண்டே முழவொடு கோடணை
பல்லிய மார்த்திடவே
கண்டே இருடியர் வானவர்
சாரணர் கைகூப்ப
அண்டர்க் கரியனும் ஆடுவ
னரதன மன்றினிலே 25

1065. வாசம் மலிதரு மார்பினின்
மாலைகள் வந்தாடத்
தேசம் புகட்டரு தண்ணுமை
சல்லரி சத்தமிட
நேசம் மலிதரு தொண்டரின்
நெஞ்சிடம் இன்பெய்த
ஈசன் இரசத மன்றினில்
இன்புடன் ஆடுவனே 26

1066. தாக்கும் புலியதள் வீக்கிய
கட்செவி தாமாடத்
தூக்கும் துடியொடு வேய்ங்குழல்
தண்ணுமை சும்மையிட
நோக்கும் அடியரின் கண்ணிணை
நுண்டுளி யாறாக
ஆக்குந் தாமிர மன்றினில்
அற்புதன் கூத்திடுமே 27

1067. வீரக் கழலொடு கிண்கிணி
தண்டைகள் மேலெழவே
சேரப் பதலயுந் துந்துமி
சல்லரி திக்கெங்கும்
வாரத் துடனாய் வானவர்
ஏனவர் வந்தேத்தத்
தேரற் கரியனுஞ் சித்திர
மன்றிடம் ஆடுவனே 28

(வேறு அறுசீர் விருத்தம்)

1068 முண்டகன் தன்னை ஈன்றோன்
மூவுல களந்த பெம்மான்
தண்டொடு சங்கம் ஆழி
தாங்கிய செங்கை மாயன்
பண்டொரு வகைக லாங்கண்
பராபரன் தாரு கக்கான்
கொண்டசீர் நடனங் கண்டே
குலவுநல் இன்பந் துய்த்தோன் 29

1069. தன்னயல் நின்ற வாதி
சேடனாம் வேந்து கேட்ப
பின்னுசெஞ் சடையு மாடப்
பிறையொடு கொன்றை தாழப்
பன்னகா பரண மாடப்
பசுபதி அன்றி யற்றும்
மன்னுசீர் நடனம் தந்த
மாண்பயன் உரைக்க லுற்றான் 30

1070. தொடர்ந்தவன் சொல்வன் அன்ப
சுந்தரன் கூத்தின் இன்பம்
படர்ந்தென துள்ளம் புக்குப்
பகருமெய்ஞ் ஞான நல்கி
அடர்ந்தெழு மகந்தை யாதி
ஆருயிர் மாசு மாற்றிப்
புடந்தரு செம்பொ னாக்கிப்
புதுமையே விளைத்த தென்றான் 31

1071. கேட்டனன் மாயன் வார்த்தை
கிளர்ந்தெழும் உளத்துச் சேடன்
வேட்கையோ டுவகை விஞ்ச
விழியினீர் பெருக எந்தை
காட்டுமா நந்தக் கூத்தை
கண்களாற் காண வெண்ணி
ஈட்டுமா தவமுஞ் செய்வான்
எண்ணினன் விடையுங் கொண்டான் 32

1072. விடைபெறு பணியின் வேந்து
விரைமலி சோலை மன்னி
மிடைதரும் அருவி கொண்டு
விளங்கிடு கயிலைக் கேகி
தடைசெயும் ஐந்தடக்கித்
தனியிடத் தமர்ந்து வைகி
விடையவற் றொழுது போற்றி
மிக்கமா தவமுஞ் செய்தான் 33

1073. பணிக்கிறை நோன்புகண்டே
பார்வதி பாகன் போந்தான்
கணிப்பருந் தவத்தோய் நீயுங்
கருதிய தென்னோ என்றான்
தணிப்பருங் காத லுள்ளோன்
சம்புநின் நடமே காண்பான்
அணைத்தெனக் கருள வேண்டும்
ஐயனே சரணீ யென்றான் 34

1074. ஆங்கவன் றொழலு மீசன்
அருத்திகொண் டுறைத லுற்றான்
வீங்குமைந் தொழிலே யாமும்
விழைந்துசெய் நடனம் மேலும்
ஈங்கியாம் அதனை யாற்றின்
இவ்வனந் தாங்கா தன்ப
பாங்குறு தில்லை வந்து
பார்த்தியால் இனிதே யென்றான் 35

1075. வன்னியே எருக்கு மத்தம்
வளர்சடைக் கணிந்து வைத்தே
தன்னையே சரண மென்னாத்
தாழ்ந்தடைந் துற்ற பேரை
மன்னியே காத்த ளிக்கும்
மலைமகள் கேள்வன் றானும்
பின்னுமே மகிழ்ச்சி விஞ்சப்
பணிக்கிறைக் குரைக்க லுற்றான் 36

1076. தில்லையில் மூல லிங்கந்
திகடரு மதற்குத் தென்பால்
அல்லறீர் சபையொன் றுண்டால்
அங்குநா மெக்கா லத்தும்
எல்லையில் நடனந் தன்னை
இயற்றியே இருப்பம் வாநீ
மல்லலந் தோளாயென்றே
மதிபுனை முடியோன் பின்னு 37

1077. மாண்புயர் சேட னின்னை
மகவெனப் பெறுவான் வேண்டி
ஏண்பயில் அத்தி ரிப்பேர்
இருடியும் பன்னி யாரும்
பூண்பயில் பூவை மேனிப்
புனிதனைப் பன்னாள் உன்னி
தூண்டிடும் அன்பி னோடு
துய்யதாம் நோன்பி ருந்தார் 38

1078. அன்னையாம் அனசூ யைதான்
அருங்கடி நீரி லாடிப்
பின்னுமே கரைக்க ணேகப்
பிறங்குநீ தலையைந் தோடும்
பன்னக மாகிப் போந்து
பாவைதன் கரத்த மர்ந்தாய்
அன்னவள் கைவி திர்த்தாள்
அடைந்தனை பதஞ்ச லிப்பேர் 39

1079. எய்துமா யிரமாஞ் சென்னி
இயைதரக் கொண்ட நீயும்
பையவே அவற்றை நீத்துப்
பதஞ்சலி உருவந் தாங்கி
துய்யதாம் நாக லோகந்
துண்ணெனச் சேறி யாங்கே
மெய்யதாம் மலையின் பாங்கர்
மேயசீர்க் குகையொன் றுண்டால் 40

1080· அக்குகை முடிவின் நீயும்
அடைகுவை தில்லைக் கானை
மிக்குயர் மலையி னுச்சி
மேவுசீர் இலிங்கம் காணீ
பக்கலில் வியாக்ர பாதன்
பயிலுவன தவமு மாங்கே
புக்குமே யமர்ந்து நோன்பு
புரிதியாம் வருதும் என்றான் 41

1081. இறையவன் இசைத்த வாறே
பணிக்கிறை ஏகிச் சென்று
மறைபுகழ் தில்லை மூதூர்
வதிபுலி முனியைக் கண்டு
முறையுடன் டணிந்து போற்றி
முற்றுமெய் அன்பி னாலே
அறைகழற் கூத்தன் சொன்ன
வனைத்தையும் புகன்று வைத்தான் 42

1082. மல்லலார் தில்லைக் கானின்
வடபுறந் தன்னி லோர்பால்
நல்லநீர்த் தடாகம் கண்டு
நண்ணிடு குணகின் பாலே
தொல்லையோர் இருவர் காணாச்
சோதிசேர் லிங்கம் கண்டு
வல்லவா வழிபா டாற்றி
வாழ்ந்தனர் பணியின் வேந்தர் 43

1083 குடிசையொன் றமைத்தே
யாங்குக் கூறுமூ லட்டனாரை
அடியவர் புகழ்ந்து போற்றும்
அருட்புலீச் சரத்தி னாரை
மிடிதவிர் பான்மைத் தாகி
மேவுசீர்ச் சிவலிங் கத்தைப்
படிமிசைப் பணிந்து நின்றார்
பதஞ்சலி முனிவர் தாமே 44

1084. பதஞ்சலி தன்மை நிற்கப்
பராவுசீர்த் தந்தை சொல்லால்
விதந்தரு மின்ன லெண்ணார்
மெய்வருத்த முந்தான் பாரார்
பதந்திரு முதல வெஃகார்
பண்புசேர் வியாக்ர நம்பி
இதந்தரு தில்லைக் கண்ணே
இருந்தவம் இயற்றி வந்தார் 45

1085. உயர்சிவ கங்கை யாடி
உற்றபன் மலருங் கொண்டே
அயர்விலா இயல்பிற் பூசை
ஆற்றுமவ் வன்பர் தாமும்
துயரது கொண்டார் வண்டர்
தூமலர் தொறும்ப டிந்தே
பெயர்தர முன்னே கொய்யும்
பெற்றியில் விழைவு கொண்டார் 46

1086. அரனடி வழுத்தி நின்றார்
அண்ணலே விமல போற்றி
விரவிடு புலிக்கால் ஆதி
விரைந்தெனக் கீதி கண்டாய்
இரவினிற் போந்து யானும்
ஏதமில் மலர்ப றித்தே
மரபினிற் பூசை செய்வன்
வந்தெனக் கருளு கென்றார் 47

1087. பற்றலர் புரங்கள் செற்ற
பராபரன் அவர்வி ருப்பை
முற்றியே வைத்தா னாக
முனிவரும் வண்டு தாத
குற்றமில் மலர்கள் கொண்டே
குலவுநற் பூசை யாற்றி
அற்புதன் நடனங் காணும்
அருத்தியிற் றவமி ருந்தார் 48

1088. தவமது கண்டு வந்த
தற்பரன் அவரை நோக்கி
பவமகல் முனியே நின்றன்
பற்றினை இனிது தேர்ந்தேம்
சிவமலி யாடல் காணும்
தினமதை யெண்ணி நின்றாய்
நவமுறக் காட்டு வேம்யாம்
காணெனை நவின்று போனார் 49

1089. மீனமர் கண்ணி பங்கன்
விடைமிசை இவர்வோன் பண்டு
கானிடம் ஆடி நின்ற
களிநடம் அதனை நன்னாள்
ஊனமில் புலிமு னிக்கும்
இலையந்தசிர்ப் பதஞ்ச லிக்கும்
வானவர் பரவி யேத்த
வந்துமே காட்டி நின்றார் 50

1090 கண்ணிணை களித்து நின்றார்
கண்ணுதல் நிருத்தம் கண்டோர்
உண்ணிகள் மகிழ்வி னானே
உலைபடு மெழுகே யானார்
அண்ணலே அரனே யிந்த
ஆடலை ஆன்ம கோடி
நண்ணியே காண மேலும்
நல்லருள் சுரத்தி யென்றார் 51

(வேறு கலித்துறை)

1091. மதியணி சடையாய் மலர்தரு
மிதழி வளர்மத்தம்
அதிர்புன லுடையாய் அரவணி
திகழும் அணிமார்பா
கதியுற அடியார் கனைகழ
லதிர நடஞ்செய்தாய்
இதனினு மிலையே எளியமும்
அடையு மிரும்பேறே 52

1092. பயில்தரு கரமும் நான்குடன்
விழியும் பகர்மூன்றாய்
இயலுறு துடியும் எரியுட
னிவையும் இயைதரவே
மயலுள இரிய அடியமும்
மகிழ நடமிட்டாய்
வியலுள விதிலும் இலையினி
இன்பே எமதிறையே 53

1093. சடையிடை முடியுஞ் சலதியு
மேவித் திகடரவே
இடைமிசை புலியி னதளது
தெரிய இசையுடனே
மிடைமட மகல விரிதரு
முறுவல் உதிர்தரவே
அடைதரு முவகை அவனியில்
இலையே அற்புதனே 54

(வேறு அறுசீர் விருத்தம்)

1094. இம்பரிற் புலியி னோடு
மிறைஞ்சிடு பணியுங் காண
அம்பிகை அயலில் மேவ
ஆனந்த தாண்டவத்தை
செம்பது மக்கால் பெயர்த்து
தைமதிக் வருபூ சத்தில்
அம்பலக் கூத்த னாரும்
ஆடினார் என்ப மேலோர் 55

1095. செல்வமார் தில்லை மூதூர்
திருந்துவா னவர்தாங் கூடி
சொல்லுபொற் சபையுஞ்
செய்தார் குஞ்சித பாதக் கூத்தர்
அல்லறீர்ந் துயிர்க ளுய்ய
அருட்சிவ காமி காண
எல்லையி லின்பக் கூத்தை
என்றுமே இயற்று கின்றார் 56

1096. கண்டிட அருள்கொ ழிக்குங்
கவின்மலி சிதம் பரத்தே
கொண்டசீர் மூர்த்தி யென்னக்
கூத்தனுங் குலவு கின்றான்
மண்டுநற் பதியதாக மன்னுமே
புலீச்ச ரந்தான்
உண்டுமே பவங்கள் மாற்ற
உயர்சிவ கங்கைத் தீர்த்தம் 57

1097. பண்டொரு காலந் தன்னிற்
பழவிறன் மதுரை மூதூர்
மண்டுசீர் வழுதி கொண்ட
மாதவச் சிறப்பி னாலே
ஒண்டொடி உமய வல்லி
ஓங்குசீர்த் தடாத கையாய்
அண்டலர் அஞ்ச வாங்கே
அரசுமே ஆற்றி வந்தார் 58

1098. சினவிடை மீது வைகுஞ்
சிவபரன் முன்னர்ச் சொன்ன
தனதுரை வழுவா வண்ணம்
தக்கநல் அமயந் தன்னில்
அனநடைத் தடாத கையை
அங்கிமுன் வதுவை காண
தினமது குறித்து வைத்தே
திருமண அழைப்பும் விட்டார் 59

1099. நத்துநல் அன்பி னோடும்
நான்மறை அந்த ணாளர்
வித்தக வியாக்ர பாதர்
விரிபுகழ்ப் பணியின் காலர்
பத்தொடும் எட்டே யாகி
பகர்தரு கணத்தி னோர்கள்
எத்திறத் தாரும் போந்தார்
ஈசனார் மணமே காண 60

1100. மணவணி கண்டா ரெல்லாம்
வந்திடும் அடிசி லாதி
உணவுகள் உட்கொண் டாங்கே
உயர்கனி வகைய ருந்தி
இணையிலா வேம்ப ணிந்தே
இருந்தவீ சன்பால் எய்திக்
துணையவாங் கரங்கள் கூப்பித்
தொழுதுமே விடையுங் கொண்டார் 61

1101. நடமது தரிசித் தன்றி
நல்லுணா வருந்தா நீர்மைத்
திடனுடை யிருவோர் தாமுந்
திருவமு துணாதி ருந்தார்
படவர வார்த்த பெம்மான்
பதைபதைத் தவர்பொ ருட்டா
மிடல்செறி கூத்தி யற்றி
மிக்கநல் உணவுண் பித்தார் 62

1102. குணங்குறி கடந்த ஞானக்
கொழுந்தென நின்றாய் போற்றி
வணங்குநின் அடியர்க் கென்றும்
வருதுயர் தவிர்ப்பாய் போற்றி
இணங்கிலி கால மெல்லாம்
இன்னருள் புரிவாய் போற்றி
மணங்கமழ் குழலாள் காண
மணிநடஞ் செய்தாய் போற்றி 63

1103. மாமறைத் தலைவ போற்றி
மன்னுயிர் முதல்வ போற்றி
காமரிந் திரன்முன் னானோர்
காண்பதற் கரியாய் போற்றி
தூமல ரடியே தூக்கித்
துணைக்கரம் வீசி நின்று
நாமிரு வோருங் காண
நர்த்தனஞ் செய்தாய் போற்றி 64

1104. இசைபயில் திரும ணந்தான்
இனிதினின் நிறைந்த வாலோ
திசைதொறும் இன்ப வெள்ளம்
தேங்கிட இருவோர் தாமும்
மிசைந்தனர் உண்டி பின்னர்
மீண்டனர் தம்ப திக்கே
வசையிலா மதுரை மூதூர்
வளநனி பெருகிற் றம்மா 65

(வேறு கலி விருத்தம்)

1105. மன்னு செந்தமிழ் வையை வளந்தர
இன்னு யிரென ஏத மிலாவகை
கன்னி நாடதைக் காதலித் தோம்பினான்
தென்னன் பஞ்சவன் சீருயர் சேகரன் 66

1106. கண்ணு தல்பயில் ஆடற் கலைதனை
மண்ண வர்செயல் மாண்பில தென்னினும்
நண்ணி யேபுனல் நாடன் இயற்றலால்
எண்ணி யீங்கது சேகரன் தேர்ந்தனன் 67

1107. தெள்ளு சீர்த்தியன் தென்தமிழ்க் காவலன்
பள்ள நீர்வயற் பாண்டிநன் நாடனும்
வெள்ளி மன்றிடம் நின்மலன் நாடொறும்
கொள்ளு மாநடம் கும்பிடும் தன்மையான் 68

1108. அண்ணல் தன்திருக் கோயில் அடைந்துமே
வண்ண வான்மணி மன்றுள் நடம்புரி
பண்ண வன்னடி பாடிப் பரவுநன்
உண்ணி கழதரும் அன்பின் னோர்பகல் 69

1109. மங்கை காண நன் மாமதி சூடியே
எங்கள் ஐயன் இயற்றிடு தாண்டவம்
அங்கு மேவியே அன்பொடு கற்றனன்
பொங்குநோவு புகுந்திட நொந்தனன் 70

1110. எல்லை யில்பகலீசநீ யெண்ணியே
வல்ல வாவலக் காலதை யூன்றியே
தொல்லை மாநடம் ஆற்றுதி தோன்றலே
அல்லல் வாட்டிடும் அஞ்சுதும் ஐயனே 71

1111. வேத மோடுயர் வேள்வியு மாயினாய்
ஏதந் தீர இடப்பதம் ஊன்றியே
போத மாநடம் ஆடுதி அன்றெனின்
நாத நல்லுயிர் நீக்குவன் காணெணா 72

1112. சாற்றித் தன்னுடை வாளினை வாங்கினான்
ஏற்றின் மேல்வரும் எந்தை திருப்பதம்
மாற்றி ஆடினன் மன்னவன் பாண்டியன்
போற்றி யெந்தைதன் பொற்பதம் ஏத்துவான் 73

1113. ஏக்கம் நீங்கினன் இன்னல் அகன்றனன்
தேக்கு கங்கைத் திருமுடிச் செல்வனின்
மாக்க ருணையில் மன்னன் மகிழ்ந்தனன்
வீக்கு மின்பம் விழைந்த துலகெலாம் 74

(வேறு கலிநிலைத்துறை)

1114. வழுதியர் தவமே வளர்தமிழ் அமிர்தே வளனோங்கி
எழுபுகழ் மதுரை இறையவ சரணம் இசைமேவிப்
பழியுள அகலப் பணியவை அசையக் கான்மாறி
வழிபடு மெளியர்க் கருளிணை சரணம் வருவாயே 75

1115. தென்னவர் தவமே தெரிதமிழ் நிதியே பெருமானே
மன்னிய மதுரை அதிபதி சரணம் மணிகண்டா
என்னுரை கொடுநீ இமயவர் மகிழக் கான்மாறி
உன்னுறும் அடியர்க் கருளினை சரணம் உமைகோனே 76

(வேறு அறுசீர் விருத்தம்)

1116. அரனடி மறவாப் பண்பே அணிகலன் என்னப் பூண்டு
மரபுயர் வணிகன் றன்னை மணங்கொடு வாழ்ந்து சின்னாள்
விரவிடும் ஏற்புடம்புவேண்டியே இறைபால்பெற்றார்
பரவிடு காரைக் காலூர்ப் பாவைநல் லாருந் தானே

1117. ஆரணங் காணா தின்றும்
ஆய்ந்திடு செம்பொன் மேனிக்
காரண முதல்வன் பக்கல்
களிப்புடன் வைகி என்றும்
ஏருறும் ஆலங் காட்டில்
இன்பநன் நடனம் காணும்
சீருறு பெருப்பே றுற்றார்
சிறந்துயர் அன்னை தானே 78

(வேறு)

1118. வேய்கள் வளர்ந்து விண்தொட்டே
வெடித்து முத்தைச் சிந்திடவும்
பேய்கள் கூடிப் பிணமாந்தி
பெரிதும் குணலை கொட்டிடவும்
ஏய்பொன் மலையான் மகளஞ்ச
எட்டி யிலவங் கரிகானில்
தாயின் இனியன் திருக்கூத்தன்
ஆடுந் தனித்தாண் டவம் போற்றி 79

(வேறு அறுசீர் விருத்தம்)

1119 மண்ணினோர் வாழ மற்றும்
வானினோர் தாமும் வாழ
கண்ணுபா தலத்தோர் வாழக்
கதிர்மதி சூடு மையன்
எண்ணிலி காலந் தோறும்
எத்துணை நடங்கள் செய்தான்
நண்ணுசீர் அவற்றின் தன்மை
நவிலுவஞ் சிறிது தானே 80

1120. சிற்பரன் றாண்ட வங்கள்
செப்பிடிற் பலவா மேனும்
பொற்புறு மன்ன வற்றின்
அளவுதான் புகறற் கொண்ணா
நற்றிறத் தாக மங்கள்
நவின்றிடும் ஏழ தாக
கற்றிடும் சிற்ப நூல்கள்
கண்டிடும் நூற்றெட் டாயே 81

1121. சாற்றிடும் இசைநூல் வாணர்
சரிகம பதநி யென்றே
போற்றிடு சுரங்க ளுக்குப்
பொருந்திடு பான்மைத் தாக
ஏற்றமார் காளி கௌரி
சந்தியா சங்கா ரம்பின்
சீற்றமார் ஊர்த்து வம்மே
திரிபுரா நந்த மென்னும் 82

(வேறு எண்சீர் விருத்தம்)

1122. அருத்தமிகு பரதநூல் அமலன் கூத்தை
அரியமுனி தாண்டவம்மே ஆனந் தம்பின்
கருத்தகலாச் சிருங்காரம் சந்தி யாவே
கருதலர்முப் புரமெரித்த ஆட லோடும்
உருத்துவரும் உக்கிரமே சங்கா ரம்மே
ஊர்த்துவமே புயங்கமொடும் உற்ற பூதம்
திருத்தகுநற் சுத்த பிர ளயமும் கூட்டித்
தெரிந்திடுமால் பன்னிரண்டாய் அடைவி னோடே 83

(வேறு அறுசீர் விருத்தம்)

1123. பன்னிரு திறத்த வாகப்
பகர்தரு நடத்தி னுள்ளே
முன்வரு முனிநி ருத்தம்
முற்றுமெய் அன்பால் அத்தன்
பன்னக இறைவ னார்க்கும்
பரவுசீர் வியாக்கி ரர்க்கும்
அன்னைதா னுவப்பத் தில்லை
யாடிய திருக்கூத் தாமே 84

1124. ஆனந்த நிருத்தஞ் செப்பின்
அனந்தமாம் உயிரே மற்றுந்
தானந்த மில்லா துற்ற
தராதல மாதி தோன்ற
தேனுந்து கொன்றை வேணிச்
சிவபரன் முறுவல் கூட்டி
மானுந்து கண்ணாள் காண
வந்துசெய் திருக்கூத் தாமே 85